# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 21 புதன்கிழமை (05-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:152

## நாகர்கோயில் பகுதியில் மோதல்!

கொழும்பு,ஜூலை5

நாகர்கோயிலுக்குத் தெற்கே அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க பதுங்கு குழிகள் மீது நேற்றுக் காலை படையினர் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து அங்கு பெரும் மோதல் வெடித்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் கொழும்பில் நேற்றிரவு அறிவித்தது.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளுக்கு பேரிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அது மேலும் தெரிவித்தது.

தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருவதாக ஊடகத் தகவல் நிலையம் நேற்றிரவு தகவல் வெளியிட்டது.

(இ-3-7)

## குடாநாட்டில் படையினருக்கு புதிய இறங்குதுறை அமைப்பு

கொழும்பு,ஜூலை5

யாழ்.குடாநாட்டில் இலங்கைக் கடற்படையினரும் இராணுவத்தின் பொறியியல் பிரிவினரும் இணைந்து கூட்டாகப் புனரமைப்புச் செய்துள்ள புதிய இறங்குதுறை சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக ரூபவாஹினி நேற்றிரவு அறிவித்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் விசேட தூதுவராக லக்ஷ்மன் ஜெயக்கொடி டில்லி பயணம்!

## வாஜ்பாய், ஜஸ்வந்சிங் ஆகியோரைச் சந்திப்பார்

கொழும்பு,ஜூலை5

**இலங்கையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் இந்திய அரசின் முன்முயற்சிகள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்துவதற்காக, ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவின் விசேட தூதுவராக கலாசார மற்றும் சமய விவகார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி நேற்றுப் புதுடில்லி பயணமானார்.**

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க பிரதமர் வாஜ்பாய்க்கு அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி மூலம் செய்தி ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் தான் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை

(12ஆம் பக்கம் பார்க்க)



## தப்பி ஓடிய 152 படையினர் கைது!

கொழும்பு,ஜூலை5

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களில் 152 பேர் கடந்த ஒரு வார காலத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

களுத்துறை, நுகேகொடை மற்றும் பாணந்துறை, கல்கிசைப் பகுதிகளில் பொலீசாரும், இராணுவத்தினரும் மேற்கொண்ட தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

## ஷெல் தாக்குதல்

கொழும்பு,ஜூலை5

திருகோணமலையில் 64ஆம் மைல் கல் பகுதியில் அமைந்துள்ள பொலீஸ் இராணுவ கூட்டுப்படை முகாம் மீது கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தது.

இந்தத் தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர். மூன்று படையினர் காயமடைந்தனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் உயிரிழந்தனர்.

## தணிக்கையை அமுல்படுத்துவது பத்திரிகை ஆசிரியரின் பொறுப்பு

### பிரசுரத்துக்கு முன் அனுமதி அவசியமில்லை

கொழும்பு,ஜூலை5

தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள செய்தித் தணிக்கை விதிகளின்படி வெளியிடப்படும் செய்திகளுக்கு ஊடகங்களின் ஆசிரியர்களும், செய்தி நிறுவனங்களுமே பொறுப்பாக இருக்க வேண்டுமென அரசாங்கத் தகவல் பணிப்பாளரும் தகுதி வாய்ந்த அதிகாரியுமான ஆரிய ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களின் ஆசிரியர்கள் தாமாகவே செய்திகளைத் தணிக்கை செய்துகொள்ளவேண்டுமென்று அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அவர் சொன்னார்.

செய்தித் தணிக்கை சம்பந்தமான புதிய சட்ட விதிகளை நடைமுறைப்படுத்துவது குறித்து விளக்கம் அளிப்பதற்காக அரசாங்கத் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

செய்தித்தாள்களின் ஆசிரியர்கள், வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களின் செய்தியாளர்கள் உட்படப் பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

"செய்தி ஆசிரியர்கள் தமது ஊடகங்களுக்காகச் செய்திகள் மற்றும் கட்டுரைகள் போன்றவற்றை தகுதி வாய்ந்த அதிகாரிக்கு அனுப்பி அனுமதி பெறவேண்டுமென்ற கட்டுப்பாடு தற்போது நீக்கப்பட்டுள்ளது.

"இதற்கமைய ஆசிரியர்களுக்குப் பெரும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. எனவே செய்தி ஊடகங்களின் ஆசிரியர்களும், நிறுவனத்தினரும் பெரும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வார்கள் என அரசு எதிர்பார்க்கின்றது" - இப்படி ஆரிய ரூபசிங்க மேலும் தெரிவித்தார்.

சட்ட திட்டங்களை மீறும் வகையில் செய்தி வெளியிடும் செய்தி நிறுவனங்களுக்கு எதிராகச் செயற்படுவதற்கு தகுதி வாய்ந்த அதிகாரி என்ற முறையில் தமக்குப் பூரண அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.

"தேசியப் பாதுகாப்பு, தேசியப் பந்தோபஸ்து ஆகியவற்றைப் பேணவே தணிக்கை முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மர்மப்பொருள் வெடித்து இரு மாணவர் உயிரிழப்பு!

### மானிப்பாய், பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை5

மானிப்பாய், பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் நேற்று இடம்பெற்ற இரு சம்பவங்களில் மர்மப்பொருள்கள் வெடித்ததில் இரு மாணவர்கள் உயிரிழந்தனர்.

மானிப்பாயில் இடம்பெற்ற சம்பவத்தில் குருநகரிலிருந்து இடம்பெயர்ந்து மானிப்பாயில் தங்கியிருந்த குருநகர் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய மாணவரான ஜேசுராஜா மகிஸ்ரன் (வயது14) உயிரிழந்தார். இவரும

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பயண ஒழுங்கை மேற்கொள்ள இன்று முதல் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம்,ஜூலை5

கப்பலில் பயணம் செய்யும் பயணிகள் தமது பயணஒழுங்குகளை மேற்கொள்வதற்கு புதிய நடைமுறை ஒன்று இன்று முதல் அமுலுக்கு வருவதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தப் புதிய நடைமுறைப்படி-

பொதுமக்கள், வர்த்தகர்கள் காலை 9 மணி முதல் நண்பகல் 1.30 மணி வரையும் -

அரச, தனியார்துறை ஊழியர்கள், படைஅதிகாரிகளின் முன்னுரிமைக் கடிதம் பெறுவோர், மதகுருமார் ஆகியோர் பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரையும் -

தமது பணிகளை மேற்கொள்ளலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திங்கள் முதல் சனிவரை இந்த நேர முறைப்படி பணிகள் இடம்பெறும் என்றும் -

ஞாயிற்றுக்கிழமைகளில் நண்பகல் 12 மணிவரையும் சகலருக்குமான பணிகள் இடம்பெறும் என்றும் - சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

(இ-3)

## கரும்புலிகள் தினத்தையொட்டி கொழும்பில் படையினர் உஷார்!

கொழும்பு,ஜூலை5

விடுதலைப்புலிகள் இன்று அனுஷ்டிக்கும் கரும்புலிகள் தினத்தையொட்டி கொழும்பில் தாக்குதல்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் வகையில் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு பிராந்தியப் பிரதி பொலீஸ் மா அதிபர் போதி லியனகே தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களில் தாக்குதல்கள் இடம்பெறக்கூடும் என கிடைத்த தகவலை அடுத்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் -

இதற்காகவே தேடுதல்கள், சோதனைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம் -

கரும்புலிகளுக்கு அஞ்சலி தெரிவிக்கும் சுவரொட்டிகளை புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை யாழ். நகர் உட்பட குடாநாட்டில் பரவலாகப் பல இடங்களிலும் ஒட்டியுள்ளது.

(இ-3)

### வாசகர்களே!

உதயனின் வார வெளியீடு 'சஞ்சீவி' வெளிவருவது தற்போதைய சூழ்நிலை வழமைக்குத் திரும்பும்வரை தாமதமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனினும் 'உதயன்' தினசரி அதிக பக்கங்களுடன் சஞ்சீவியில் வெளிவந்த 'வாரபலன்', 'அங்கிகள் பலவிதம்', 'உலக உலா' உட்பட பல அம்சங்களுடன் தொடர்ந்து வெளியாகும்.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களும் அடுத்துவரும் நாள்களில் தொடர்ந்து 'உதயனில்' பிரசுரமாகும்.

(ஆர்)

## பயணச் சீட்டுக்கள் நாளை

யாழ்ப்பாணம்,ஜூலை5

பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையே இடம்பெறவுள்ள 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலின் அடுத்த சேவையில் பயணம் செய்யவிருக்கும் பயணிகளுக்கான பயணச்சீட்டுக்கள் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிமுதல் விநியோகிக்கப்படவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தச் சேவையில் செல்வதற்காக 'ஏ' வரிசையில் ஒன்று முதல் 250 வரையான இலக்கங்களைப் பெற்றவர்கள் மட்டும் நாளை சமுகம் தந்து பயணச்சீட்டுக்களைப் பெறும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சேவை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த சேவைக்கான 'பி' இலக்க வரிசையிலும் பதிவுகள் முடிவடைந்துவிட்டன என்றும் சிவில் நிர்வாக அலுவலகம் தெரி வித்தது.

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 16 - 08 - 1952



உதிர்வு 22 - 05 - 2000

## திருமதி புனிதவதி கதிர்காமநாதன்

**பெயருக்கேற்ற புகழுடன் புவியில் வாழ்ந்தாயம்மா**
**அயராத முயற்சியுடன் அன்பு மழை பொழிந்தாயம்மா**
**துயருற்ற மக்களின் துன்பத்தை துடைத்தாயம்மா**
**தயவற்ற விமானக் குண்டினால் உன்னுயிரை மாய்த்தாயம்மா**
**வயதாக வயதில் வளமான வாழ்வை நீத்தாயம்மா**
**தாயாக நீயிருந்த இடம் நிரப்ப யாரால் முடியுமம்மா**
**ஓயாது அழுதாலும் எம் நெஞ்சை விட்டகலாயம்மா**

**எதிர்பாராது இவ்வுலக வாழ்வை நீத்த குடும்பத் தலைவியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.**

கதிர்காமநாதன் (கணவர்),
கௌதமி (மகள்),
கௌதமன் (மகன்),
அண்ணைமார், அக்காமார், தங்கை, அத்தான்மார், மச்சான்மார், மச்சாள்மார், பெறாமக்கள், மருமக்கள், மற்றும் உற்றார், உறவினர்.

தற்போதைய முகவரி:
*ஆஸ்பத்திரி வீதி,*
*சங்கானை.*

*பழைய பொலீஸ் நிலைய வீதி,*
*சாவகச்சேரி.*

(76193)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 05 - 03 - 1920



உதிர்வு 05 - 06 - 2000

திருமதி
## கந்தையா நல்லபிள்ளை

**பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்**
**அன்புத் தெய்வமாய் எம்மை வழி நடத்தி**
**நல்வழி காட்டிய எமது அன்புத் தெய்வத்தின்**

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (05-07-2000) புதன் கிழமை காலை 10மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

**கணவர்,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

தகவல்:
*க.தியாகலிங்கம்,*
*பழைய பொலீஸ் நிலைய ஒழுங்கை,*
*சுன்னாகம் தெற்கு.*

(76188)

# மரண அறிவித்தல்

## N.V.ராமன்

(உரிமையாளர், இந்திரா ஸ்ரோர்ஸ்,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த N.V.ராமன் 15-06-2000 அன்று இந்தியாவில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இந்திரா ஸ்ரோர்ஸ்,*
*76, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
**T.P.No: 2885**

தகவல்:
S.K., ரவி
(ஊழியர்கள்)

(76206)

## வயோதிபர் சூட்டுக்குப் பலி

தென்மராட்சி,ஜூலை5

இரவுவேளை வீதியில் நடமாடிய வயோதிபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியானார்.

இச்சம்பவம் கடந்த வியாழக் கிழமை நள்ளிரவு எழுதுமட்டுவாழ் மருதங்குளத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த 70 வயது வயோதிபரே பலியானவரென அடையாளம் காணப்பட்டது. மரண விசாரணையின் பின்னர் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## நாடு முழுவதும் 7,500 எய்ட்ஸ் நோயாளிகள்

கொழும்பு,ஜூலை5

நாடு முழுவதும் ஏழாயிரத்து 500 எய்ட்ஸ் நோயாளிகள் இருப்பது இனங்காணப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து இந்த விடயம் தெரியவந்துள்ளதாக சுகாதார, தேசிய வைத்தியத்துறை அமைச்சின் எய்ட்ஸ் நோய்ப் பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் ஜயந்தி அபயவிக்கிரம தெரிவித்தார். (இ-3)

## மாகாண பிராந்திய ஆணையாளர்

யாழ்ப்பாணம்,ஜூலை5

வடக்கு - கிழக்கு மாகாண புதிய பிராந்திய ஆணையாளராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஒன்றரை வருட காலமாக இப்பதவியை வகித்த ஏ.ஸி. செபநாயகத்தின் பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து இப்பதவிக்கு புதிதாக அவர் நியமனம் செய்யப்பட்டார்.

கடந்த முதலாம் திகதியிலிருந்து இப்பதவியைப் பொறுப்பேற்றுள்ள து.வைத்திலிங்கம் மேலதிக அரச அதிபர் பதவியுடன் இப்பதவியையும் வகிக்கிறார். (இ-5)

## நோய்கள் பரவுகின்றன

வடமராட்சி,ஜூலை5

வட்மராட்சிப் பிரதேசத்தில் கண் நோய், வயிற்றோட்டம், காய்ச்சல் ஆகிய நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

இந்த நோய்களால் இடம்பெயர்ந்தோரும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-173)

## இடம்பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

தென்மராட்சி,ஜூலை5

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி கிழக்குப் பகுதியில் தங்கியுள்ள 2 ஆயிரத்து 600 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க பிரதேச செயலர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்.

நிவாரணப் பொருள்கள் கொடிகாமம், பளை, சாவகச்சேரி ஆகிய பலநோக்குக்கூட்டுறவுச்சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்படவுள்ளன.

பளைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களும் இப்பகுதிகளில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-117)


**ராஜா**
யாழ்ப்பாணம்
ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்பா, ரகுவரன் நடித்த
**அருணாச்சலம்**
புதிய நேரம்
10.30, 2.00
(C/12143)



**புலமைப்பரிசில் 2000**
இன்று வெளியாகின்ற மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களை எம்மிடமும் பிரபல்ய புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
அடுத்த பரீட்சை: ஞாயிறு
**BOND** யாழ்ந்கர்.
(76200)


# மரண அறிவித்தல்கள்

## செல்வி சரஸ்வதி கந்தையா

(யோகம் ரீச்சர்)

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சரஸ்வதி கந்தையா(இளைப்பாறிய ஆசிரியை, மீசாலை விக்கினேஸ்வராக் கல்லூரி) நேற்று (04-07-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பண்டாரவளையைச் சேர்ந்த திருமதி அன்பரசியின் சிறிய தாயாரும், ரமணிதரனின் மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்றுக் காலை 11.00 மணியளவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி கனகம்மா வல்லிபுரம் குடும்பத்தினர்
(சகோதரி)

தற்காலிக முகவரி:
*கோவிற் சந்தையடி,*
*துன்னாலை மேற்கு, கரவெட்டி.*

(76175)

## கந்தையா மயில்வாகனம்

(செல்லத்துரை)
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும் தொண்டமானாற்றை வசிப்பிடமாகவும் கொண்ட க.மயில்வாகனம் நேற்றுமுன்தினம் (03-07-2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், துரையப்பா-காலஞ்சென்ற சுப்பம்மா தம்பதிகளின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், சிவபாக்கியம் மற்றும் இராசம்மா, இராசையா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பாலசுந்[illegible]ஜா, கனகசுந்தரராஜா மற்றும் கனகேஸ்வரி, தங்கேஸ்வரி, [illegible]வசுந்தரராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (03-07-2000) திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பதிவாளர் ஒழுங்கை,*
*உடுப்பிட்டி.*

தகவல்:
ம.பரமேஸ்வரி
(மனைவி)

(76180)

## செல்லத்துரை ஜெகதீஸ்வரன்

(மக்கள் வங்கி, சுன்னாகம்)

உரும்பிராயை பிறப்பிடமாகவும் ஏழாலையை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஜெகதீஸ்வரன் (எழுதுவினைஞர், சுன்னாகம் மக்கள் வங்கி) நேற்றுமுன்தினம் (03-07-2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - தவமணி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம் - கனகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சத்தியராணியின் அன்புக் கணவரும், வாகீசனின் (மாணவன், புனித பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்) அன்புத் தந்தையும், யோகேஸ்வரநாதனின் (வலி.கிழ. தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி) அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சத்தியமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி (லண்டன்), சத்தியேஸ்வரி, கிருபாமூர்த்தி, பகவதி, சற்குணலீலா (சந்திரா) ஆகியோரின் மைத்துனரும், பரமானந்தம், ஜெயலட்சுமி, தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04-07-2000) செவ்வாய்க்கிழமை ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

*ஏழாலை.*

தகவல்:
ச.கிருபாமூர்த்தி
(மைத்துனர்)

(76177)

## திருமதி செல்லம்மா விநாசித்தம்பி

(ஓய்வுபெற்ற அதிபர், பளை)

பளையைப் பிறப்பிடமாகவும் மூளாய் வீதி வட்டுக்கோட்டையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் திருமதி செல்லம்மா விநாசித்தம்பி நேற்று (04-07-2000) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் விநாசித்தம்பியின் அன்பு மனைவியும் இளங்கோ (நியூசிலாந்து), லோகேஸ்வரி (ஆசிரியை, பளை மத்திய கல்லூரி), மனோரஞ்சிதமலர் (லண்டன்), டாக்டர் பவானி (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் வளர்மதி (நியூசிலாந்து), ஜெயக்குமார் (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி), சாந்திகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் இராசையா (ஓய்வுபெற்ற மேலதிக மாவட்டப் பதிவாளர்), இராசலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாதுஷின், ஜெயந்த் (நியூசிலாந்து), திசாளினி, எழிலஜன், எழில்ஜனி, அபிரா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-07-2000) புதன்கிழமை 'இலக்குமி வாசா', வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையில் நடைபெறும்.

*'இலக்குமி வாசா',*
*மூளாய் றோட்,*
*வட்டு தெற்கு,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
சி.விநாசித்தம்பி
(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர், பளை)

(76189)

## வல்லிபுரம் வைத்திலிங்கம்

தாவடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் வைத்திலிங்கம் நேற்று (04-07-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, கனகம்மா, இராசம்மா, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் நாகலட்சுமி (திருகோணமலை), சந்திரசேகரம் (இத்தாலி), குலசேகரம் (கனடா), குருமூர்த்தி (சுவிஸ்), ஞானசுந்தரி, சிவகாமசுந்தரி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சந்திரசேகரம், சிவராணி, சிவாஜினி, உதயகுமாரி, லோகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மயூரன், தேவரஜனி, நளினி, பிரசாந்த், கிரிஷீதன், குருஷோத்தன், றஜீகா, சாகீபன், வேணிகா, மதிவதனி, மதுமிலா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-07-2000) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீதிராஜா வீதி,*
*கொக்குவில் மேற்கு.*

தகவல்:
ச.லோகேந்திரன்
(மருமகன்)

(76198)

# பாண், மா விலைகளை குறைக்க நடவடிக்கை

## செயலகத்தில் நாளை மறுதினம் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

கோதுமை மாவின் விலை கிலோவுக்கு மூன்று ரூபாவினால் அரசாங்கத்தினால் குறைக்கப்பட்டுள்ள போதிலும் யாழ்ப்பாணத்தில் பழைய விலைக்கே மா மற்றும் பாண் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ப. நோ. கூ. சங்கங்களிலும் சில தனியார் கடைகளிலும் மா விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மா விலை குறைக்கப்பட்டதாக தொடர்பு சாதனங்கள் மூலம் அறிவிக்கப்பட்டபோதிலும் உத்தியோகபூர்வமாக யாழ். செயலகத்துக்கு அறிவிக்கப்படாமையினாலேயே யாழ்ப்பாணத்தில் மாவின் விலை குறைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் யாழ் மாவட்ட உணவு மற்றும் எரிபொருள் விநியோகம் சம்பந்தமான கூட்டம் நாளை மறுதினம் 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மா, பாண் போன்றவற்றின் விலை குறைப்பு தொடர்பாகவும் எரிபொருள், மண்ணெண்ணெய், உணவு விநியோகம் தொடர்பாகவும் ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள், ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## தென்மராட்சி ஆசிரியர் சம்பளம்

தென்மராட்சி, ஜூலை 5

இடம்பெயர்வு காரணமாக இதுவரை மே, ஜூன் ஆகிய மாதங்களுக்குரிய வேதனத்தைப் பெற்றுக்கொள்ளாத தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்கள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கும் தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வலய கல்விப் பணிப்பாளர் மு.வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## வங்கிக் கிளைகள் இடம் மாற்றம்

வடமராட்சி, ஜூலை 5

சாவகச்சேரி இலங்கை வங்கிக்கிளை பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளைக்கு அருகில் இயங்கி வருகிறது.

மக்கள் வங்கிக்கிளை தேசிய சேமிப்பு வங்கிக்கிளை ஆகியன யாழ்ப்பாணத்திலும் சுன்னாகத்திலும் இயங்கி வருகின்றன. (ஐ-173)

# குடாநாட்டில் யுத்தத்தால் 7 ஆயிரம் ஹெக்டெயரில் பயிர்ச்செய்கை பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 5

தொடரும் யுத்தத்தினால் யாழ். குடாநாட்டில் மொத்தம் 7 ஆயிரத்து 203 ஹெக்டெயர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை கைவிடப்பட்ட நிலையில் இருப்பதாக திருநெல்வேலியில் உள்ள உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மருதங்கேணி, பளை, சாவகச்சேரி பிரதேசங்களில் விவசாயச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் அறுவடைக்கு முன் இடம்பெயர்ந்துள்ளமையால் பராமரிப்பின்றி விவசாயப் பயிர்கள் அழிந்துள்ளன.

மருதங்கேணியில் 683 ஹெக்டெயர் நெல் வயலும் 298 ஹெக்டெயர் மேட்டுநிலப் பயிரும், பளைப் பகுதியில் 813 ஹெக்டெயர் நெல் வயலும் 298 ஹெக்டெயர் மேட்டு நிலமும், சாவகச்சேரியில் 4 ஆயிரத்து 271 ஹெக்டெயர் நெல் வயலும் 840 ஹெக்டெயர் மேட்டுநிலச் செய்கையும் கைவிடப்பட்டுள்ளதாக உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

தென்மராட்சியில் மட்டும் 14 ஆயிரத்து 688 விவசாயக் குடும்பங்கள் தமது விவசாயச் செய்கையைக் கைவிட்டு இடம் பெயர்ந்துள்ளன. (ஐ-5)

## அரச ஊழியர்கள் கையொப்பமிட வசதி

வலி. கிழக்கு; ஜூலை 5

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர்கள் அவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் இவர்கள் கையொப்பமிட்டு வருவதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-180)

## விண்ணப்பதாரிகள் சமுகமளிக்க கோரிக்கை

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா 2000—2001 ஆம் கல்வியாண்டு பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் செய்தவர்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் கேட்டுள்ளார்.

இவர்கள் முதல் நியமனக் கடிதம், பட்டச் சான்றிதழ், அதிபரின் உறுதிப் பத்திரம் ஆகியவற்றின் மூலப்பிரதி மற்றும் நிழற்படப்பிரதிகளையும் எடுத்துவருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க)

## நகர சபைக்கு தலைவர் நியமனம்

தென்மராட்சி, ஜூலை 5

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சித்தேர்தல் நடைபெற்று இரண்டரை வருடங்களின் பின்னர் சாவகச்சேரி நகர சபைக்குப் புதிய தலைவராக பெனடிக்ற் தனபாலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய தலைவர் நகர சபையின் உறுப்பினர்கள், ஊழியர்களைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் புளொட் அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் உள்ள கூட்டுறவு மண்டபத்தில் சந்திப்பு இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## வடமராட்சியில் தொலைக்கல்வி நிலையம்

வடமராட்சி கல்வி வலயத்தில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் மீண்டும் தொலைக் கல்வி நிலையம் இம் மாதம் முதல் வாரத்தில் இருந்து ஆரம்பமாகியுள்ளது.

அண்மையில் நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்களுக்கு இந் நிலையத்தின் ஊடாக தொலைக் கல்விப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு ஆசிரிய நியமனம் பெற்றவர்கள் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் இயங்கும் தொலைக் கல்வி நிலையத்தில் கடமையாற்றும் சிரேஷ்ட போதனாசிரியர் ந. குணசீலனிடம் பதிவு செய்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார். இவர்களின் பதிவுகள் நிறைவுற்றதும் விரிவுரைகள் பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். (ஐ-118-173)

## கோப்பாய் கலாசாலையில்

கோப்பாய் ஆசிரிய கலாசாலை இந்துமா மன்றம் நடத்தும் திருவாசக முற்றோதல் பூர்த்தியும் மாணிக்கவாசகர் விழாவும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நடைபெறும்.

# தற்போதைய நெருக்கடிச் சூழலில் கல்வி கற்பதில் பல்வேறு சிரமங்கள்

## பயிற்றப்படாத ஆசிரியர் சங்கம் மகஜர்

தற்போதைய போக்குவரத்து வசதி மோசமாக உள்ள நிலையில் தொலைக் கல்வித்துறையின் ஊடாகக் கற்பதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். மேலும் ஐந்து தினங்கள் பாடசாலையில் கல்வி கற்பித்துவிட்டு வார இறுதி நாள்களில் தொலைக்கல்வியினை மேற்கொள்ளுவதும் கடினமாக இருக்கும்.

இவ்வாறு பயிற்றப்படாத ஆசிரியர்கள் சங்கம் மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக் கலாசாலை அனுமதி கிடைக்காது பாதிக்கப்பட்ட, பயிற்றப்படாத ஆசிரியர் சங்கம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணத்தில் இயங்கும் இரண்டு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கும் 2000 — 2001 ஆம் கல்வியாண்டிற்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட போதிலும் தகுதியிருந்தும் எம்மில் பலர் அனுமதி கிடைக்காத நிலையில் வெளியில் நிற்கிறோம்.

21—01—2000 ஆம் திகதி தினகரன் பத்திரிகையில் குறிப்பிட்டமைக்கு அமைய தொலைக்கல்வி நெறியில் பதிவு செய்து கொண்டவர்கள் பயிற்சிக் கலாசாலைக்கு விண்ணப்பிக்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. நாங்கள் தொலைக் கல்வி நெறிக்கு விண்ணப்பம் மட்டும் கொடுத்திருந்தோம். ஏனைய பதிவு செய்வதற்கு வேண்டிய ஆவணங்களோ பதிவுக் கட்டணமோ செலுத்திப் பதிவு செய்யவில்லை. எமக்குப் பதிவிலக்கமோ பதிவுப் புத்தகமோ எதுவும் இன்றுவரை கிடைக்கவில்லை.

நாங்கள் தொலைக் கல்வி நெறிக்கு விண்ணப்பித்தமைக்குக் காரணம் 2000 ஆம் ஆண்டிற்காக உரிய காலத்தில் கலாசாலைகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டமையும் ஜூன் 7, 1999 ஆம் திகதிய 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் உயர் கல்வியமைச்சுச் செயலாளரினால் இனிமேல் பயிற்சிக் கலாசாலைக்கு ஆசிரிய மாணவர்கள் உள்வாங்கப் படமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தமையுமே காரணமாகும்.

இவ்வாறு இருக்கையில் எம்முடன் ஒரே காலப் பகுதியில் நியமனம் பெற்ற ஏனையோர் கலாசாலைக்கு உள்வாங்கப்பட்டு விரைவில் ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்பட்டு சம்பள உயர்வுகளும் பெற, ஒரே திகதியில் நியமனம் பெற்ற நாங்கள் பல வருடங்கள் பிந்தியே ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்பட்டு அதுவரை 2 ஆயிரத்து 500 ரூபா சம்பளத்துடனேயே சேவையாற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகிறது.

மேலும் நாங்கள் தொலைக் கல்வித்துறைக்கு விண்ணப்பம் கொடுக்கும்போது யாழ்ப்பாணத் தொலைக்கல்வித் துறையினர் 'பயிற்சிக் கலாசாலை ஆரம்பித்தால் நீங்கள் எல்லோரும் போகலாம்' எனவும் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட பொதுச் செயலாளர் 23-1-2000 அன்று கலாசாலை ஆரம்பித்தால் நாங்கள் எல்லோரும் அங்கு செல்வதற்கான ஒழுங்குகளைச் செய்து தருவதாகவும் கூறியிருந்தார்.

ஆகவே பாதிக்கப்பட்டுள்ள பயிற்றப்படாத ஆசிரியர்களாகிய நாங்களும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு உள்வாங்கப்பட்டு இரண்டு வருடங்களில் பயிற்சியை முடித்து உரிய காலத்தில் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டு மனநிறைவான சேவையாற்ற உதவுமாறு கேட்கின்றோம் — இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

(ஐ-111)


உ

ஆவரங்கால்

பர்வதவர்த்தனி சமேத நடராஜ ராமலிங்க சுவாமி தேவஸ்தானம்

05—07—2000 — புதன்கிழமை சப்பறத் திருவிழா
06—07—2000 — வியாழக்கிழமை காலை 9மணிக்கு இரதோற்சவம்
07—07—2000 — வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 3 மணிக்கு திருவூஞ்சல், கொடி இறக்கமும் நடைபெறும்.

ஆவரங்கால் சிவன் தேவஸ்தானம்.

(76202)



கண்ணீர் அஞ்சலி

செல்லத்துரை ஜெகதீஸ்வரன்
(மக்கள் வங்கி, சுன்னாகம்)

தோற்றம்: 24-05-1947 — மறைவு: 03-07-2000

புன்னகைப் பூக்கள் சிந்தி
புலர்காலைப் பொழுதில் நீவிர்
வண்ணமார் எழில் சுமந்து
வந்திடு வீரெம் அலுவலகம்
நன்னடை ஒழுகி மக்கள்
நலனையே பெரிதாய்க் கொண்டீர்
என்னதான் நேர்ந்த தின்று
எம்மையே நீங்கு மாறு!
வங்கியில் காலை வேளை
வந்திடும் மக்கள் கூட்டம்
இங்கிதம் தெரிந்த நீவிர்
இனியதாய்ப் பேசி உதவி
வங்கியின் மேன்மை காத்தீர்
வாடிக்கை யாளர் மகிழ!
பொங்கிடும் துயரி னாலே
பொசுங்கிட வைத்தேன் சென்றீர்?
எழில்நிறை ஏழாலை யின்
ஏந்தலே! ஜெகதீஸ் வரா!
பொழிந்திடும் கண்ணீர் ஆறாய்ப்
பெருகிடத் துயருற் றிருக்கும்
வழித்துணை மனையாள் பாராய்!
வாடிய மகனைப் பாராய்!
அழிந்திடும் உடம்பு எனினும்
அழியாது உம் நினைவு.

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினர்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள் வங்கி, சுன்னாகம். — முகாமையாளர், ஊழியர்கள்.

(76204)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### காணவில்லை

மா வெள்ளை நிற ஜேர்சி பால் மாடு 30 - 06 - 2000 தொடக்கம் காணவில்லை. V P T என்னும் குறி உள்ளது. கண்டவர்கள் தங்கவேல் 541, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(76183)

### விண்ணப்பப்படிவம்

கணக்காய்வாளர் பதவிக்கான படிவம் விற்பனையாகின்றது. விவரம் 14-6-2000 வர்த்தமானியில் பார்க்கவும். நாயகபாலன், மானிப்பாய்.

(76185)

# வடக்கு . கிழக்கு பாடசாலைகள் இன்னமும் வளம் குன்றிய நிலை!

திருகோணமலை, ஜூலை 5

வடக்கு — கிழக்கில் பல பாடசாலைகள் இன்னமும் கொட்டில்களில் — வசதி குறைந்த நிலையில் — இயங்குகின்றன.

இப்படிக்கூறுகிறார் வடக்கு — கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன்.

திருகோணமலை மெதடிஸ் பெண்கள் பாடசாலையில் அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

வசதி குறைந்த நிலையில் உள்ள இந்தப் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் திறமையினாலேயே இந்தப் பாடசாலை மாணவர்களின் கல்வியைச் சீராக்க முடியும் —

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

## நெடுந்தீவில் கலைஞர்கள் கௌரவிப்பு

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிக்கும் வயது முதிர்ந்த மூத்த கலைஞர்களைப் பாராட்டி விருது வழங்கும் வைபவம் ஒன்று விரைவில் நடைபெறவுள்ளது.

நாடகம், நாட்டுக்கூத்து மற்றும் இசைக்கருவிகளை இசைப்பதில் பாண்டித்தியம் பெற்றவர்கள், சிற்பங்களை செதுக்குவதில் அனுபவம் பெற்றவர்கள் இவ்வாறு விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை —

மேற்படி விழாவில் விருது பெறவுள்ள கலைஞர்களை தெரிவு செய்வதற்கென நெடுந்தீவு கலாசாரசபைக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகத்தின் வழிகாட்டலில் மேற்படி விழா இடம்பெறவுள்ளது.

நெடுந்தீவு பிரதேச சபை மற்றும் ஈ. பி. டி. பி அமைப்பின் உதவியுடன் இந்த விழா நடைபெறவுள்ளது.

(ஐ-7)

## விவசாயக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ். மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நாளை 6 ஆம் திகதி மாலை 2 மணிக்கு யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் அரச செயலகத்தில் நடைபெறும்.

(சி-5)

## தமிழ்த்தினப் போட்டி

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை முதல் இரு தினங்கள் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

தினமும் காலை 9 மணி முதல் போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் மூத்ததம்பி பொன்னையா

(பண்டிதர்)

மண்ணுலகில்: 1917 - 03 - 17

விண்ணுலகில்: 1999 - 07 - 16

திதி: 2000 - 07 - 05

எம்மை வாழவைத்த குலதெய்வமே — நீர்
எம்மைப் பிரிந்து ஆண்டொன்று சென்றதோ!
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் — எம்
ஆதாரமே உங்களை நாம் என்றும் மறவோம்.

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகிறோம்.

— குடும்பத்தினர்

திருநாவலூர்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(சி/12146)

## முதலாம் வருட நினைவஞ்சலி



திருமதி

சின்னத்தம்பு வள்ளிப்பிள்ளை

(கருகம்பனை, காங்கேசன்துறை)

தோற்றம் 1920—05—05

மறைவு 1999—07—16

திதி: 05—07—2000

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
மாண்டிடுமா உங்கள் நினைவுகள்?

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்

தகவல்:
நி. சரஸ்வதி
வளாக வீதி,
திருநெல்வேலி.

(76182)

## அறிவித்தல்

மானிப்பாய் கோயில்பற்று

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வரையறுக்கப்பட்டது

கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான

### கிளைப் பொதுச்சபைக் கூட்டம்

காலம் 2000 - 07 - 09

வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவு செய்யப்பட்ட துணைவிதிகளின் 23 ஆம் பிரிவின் கீழ் வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உரித்தாக்கப்பட்டும் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 1998—05—19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய மானிப்பாய் கோயில் பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் 2000—07—09 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் நடைபெறும்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏற்கனவே கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம்.

கிளைப் பொதுச் சபைக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களைக் குறித்த அறிவிப்புக்களின்படி கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளித்துத் தங்கள் ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தி கூட்டுறவு இயக்கத்தினை ஜனநாயக ஆளுகை கொண்டதாகச் செயற்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

செ. கு. சண்முகநாதன்
கூ. அ. உ. ஆணையாளர்
யாழ். மாவட்டம்.

கூட்டுறவு அலுவலகம்
857, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/12144)

## கேள்வி அறிவித்தல்

### பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், (மாகாணம்) யாழ்ப்பாணம்

1. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களத்தினரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையினரால் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் திகதி முற்பகல் 10. 30 மணிவரை யாழ்ப்பாணம், பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குத் தரம் எம்—9 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. தகுதியுடையோர் உரிய கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விவைப்புப்பணம் |
| --- | --- | --- |
| (1) ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை சிகிச்சை நிலைய பூர்த்தி வேலை. | 8000/- | 500/- |
| (2) காரைநகர் வைத்தியசாலை திருத்தவேலை. | 3000/- | 250/- |

5. கேள்விப் பத்திரங்களை 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி பிற்பகல் 4. 45 மணிவரை யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

6. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

7. இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்று எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

எந்திரி இ. ஸ்ரீகாந்தா,
பிரதம எந்திரி,
கட்டடங்கள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

பிரதம எந்திரி அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (மா.)
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/12147)

# தீர்வுத் திட்டத்தின் தலைவிதி எப்படி அமையப் போகிறது?

## இனப்பிரச்சினை என்றே ஒன்று இல்லை என்கிறார்கள் மகாநாயக்கர்கள்

**சிறிலங்காவில் இனப்பிரச்சினை என்று ஒன்று உண்டு எனப் பலர் ஏற்றுக்கொண்டுள்ள போதிலும் அவ்வாறான பிரச்சினை ஒன்றில்லை என மகாநாயக்கர்கள் தெரிவித்துள்ளனர். இருப்பினும் இனப் பிரச்சினை என ஒன்றுண்டு என்பதை அரசும் உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் அதற்கான தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து நாடாளுமன்றத்தில் சமர்பிக்க அரசு முயன்று வருகிறது. இந்தத் தீர்வுத் திட்டத்தின் விதி எவ்வாறு அமையும் என்பதை 'சுனந்த தேசப்பிரிய' கடந்த ஞாயிறன்று 'லங்காதீப' சிங்கள வார இதழில் எழுதிய இக்கட்டுரை ஆராய்கிறது.**

அரசமைப்பு மறுசீரமைப்புத் திட்ட ஏற்பாடுகளை மிகவும் கவனமாக உற்றுநோக்குவோமேயானால் அது புதிய அரசமைப்புத் திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க எடுக்கப்படும்நடவடிக்கை என உணர்ந்து கொள்ளலாம்.

இந்தப் புதிய அரசமைப்புத் திட்டம் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காகவே உருவாக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

நடைமுறையிலுள்ள அரசமைப்பு திட்டத்தின் 13 ஆவது திருத்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதே உத்தேச அரசமைப்புத் திட்டத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி, இந்த உத்தேசத் திட்டத்திற்கு ஐ.தே.கட்சியும் தனது ஆதரவை வெளிப்படையாகவே தெரிவித்துள்ளது. அத்தோடு தமிழ் மற்றும் முஸ்லீம் கட்சிகள் பலவும் ஒத்துழைப்பு வழங்குகின்றன.

### 'சிங்கள உறுமய' எதிர்ப்பு

அரசாங்கத்தின் உத்தேசத் திட்டத்தை அதாவது தீர்வுத் திட்டத்தை தோற்கடிக்கும் நடவடிக்கைகளை "சிங்கள உறுமய" கட்சி ஏற்கனவே ரேம்பித்துள்ளது. சிங்கள உறுமய கட்சிக்கு மக்கள் ஆதரவு எவ்வளவுண்டு என்பதை இதுவரை அறிந்துகொள்ள முடியவில்லை. எவ்வாறாயினும் 1987 இல் நடைபெற்றது போலல்லாது அதற்கு முந்திய காலங்களில் இடம்பெற்றது போல அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலம் அரசியல் தீர்வு காணும் முயற்சிகளுக்கு எதிராக உருவான அரசியல் எதிர்ப்புச் சக்திகள் தற்போது சிங்கள உறுமய கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.அல்லது அதற்கும் ஆதரவை வழங்குகின்றன. குறிப்பாக அதிகாரப் பகிர்வு தொடர்பாக அண்மைக் காலங்களில் கடும் எதிர்ப்பைத் தெரிவித்த பௌத்த பிக்குமார்கள் சிங்கள உறுமய கட்சிக்கு ஆதரவை வழங்குவர். பௌத்த பிக்குகளின் ஜாதிக சங்க சபா ஏற்கனவே நோர்வே அரசின் தீர்வு முயற்சிகளை முற்றாக நிராகரித்துள்ளது.

'இந்த நாட்டில் தமிழ் மக்களின் பிரச்சினை என ஒன்றில்லை. ஆனால், பயங்கரவாதப் பிரச்சினை என ஒன்று மாத்திரமே உள்ளது' - என மகாநாயக்கர்கள் கூட்டாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவித்துள்ளனர். மகாநாயக்கர்களின் இந்த நிலைப்பாடானது அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான அரசின் உத்தேசத் திட்டத்திற்கு எதிரான சிங்கள இனத்தின் எதிர்ப்புச் சக்தியாக உருவெடுத்துள்ளது.

அதாவது தமிழ் மக்களுக்கு குறிப்பான பிரச்சினைகள் எவையும் இல்லாதபடியால் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது தேவையற்ற ஒன்றாகும் என்பதே அதன் கருத்து.

பௌத்த பிக்குகள் மாத்திரமன்றி அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட இளைஞர் அமைப்புக்கள் மற்றும் 'சிங்கள வீரவிதான' என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள சிங்கள வர்த்தக மற்றும் தொழிலதிபர்கள், சிங்கள உறுமய கட்சியுடன் தொடர்புகளை வைத்துள்ளனர்.

### சிங்கள ஆணைக்குழு

1996இல் அமைக்கப்பட்டு 1997இல் அறிக்கை ஒன்றை வெளியிட்ட 'சிங்களக் கொமிசன்' (சிங்கள ஆணைக்குழு) அரசாங்கத்தின் உத்தேசத் திட்டம் காரணமாக 2500 ஆண்டுகளாக சிறிலங்காவில் பேணிப் பாதுகாக்கப்பட்ட இறைமைக்கு பேராபத்து உருவாகும் எனத் தெரிவித்துள்ளது. தற்போது சிங்கள உறுமய கட்சிக்கு ஆதரவை வழங்கும் எதிர்ப்புச் சக்திகள் இந்த 'சிங்களக் கொமிசனின்' கருத்துக்கு முன்னுரிமை வழங்குகின்றன.

எவ்வாறாயினும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு "சிங்களக் கொமிசன்" அப்போது அவ்வளவாக எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை. சிங்கள கொமிசனின் பின்னணியில் ஐ.தே. கட்சி உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு இக்காரணத்தாலேயே எழுந்தது.

எவ்வாறாயினும் தீர்வுத் திட்டத்தை தற்போது எதிர்ப்பவர்களின் கருத்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகும். அதாவது (வேறு எதுவித முயற்சிகளையும் மேற் கொள்ளாமல்-யுத்தத்தை மாத்திரமே நடத்தி - அதில் வெறும் வெற்றியின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பதே அவர்களின் கருத்தாகும்.

### இதே சக்திகளே அன்றும் எதிர்த்தன

தீர்வுத் திட்டத்தை இன்று எதிர்க்கும் சக்திகளே 1957, 1966,1981 மற்றும் 1987 ஆகிய வருடங்களில் அதிகாரங்களைப் பரவலாக்கல் மற்றும் அதிகாரப் பகிர்ந்தளித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தன. மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில்,அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதானது நாடு துண்டாடப்படுவதற்கு வழிவகுக்கும் என இந்த எதிர்ப்பாளர்கள் தெரிவித்திருந்தனர்.

1981 இல் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு வழங்கப்பட்ட சொற்ப அதிகாரங்களையே இந்த எதிர்பாளர்கள் பெரிதுபடுத்தி எதிர்த்தனர். அதாவது மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் நாட்டைத் துண்டுபோட வழிவகுக்கும் என அப்போது அவர்கள் தெரிவித்தனர். இந்த அடிப்படையில்தான் 1987 இல் மாகாண சபைகள் குறித்தும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இதன் ஒரு செயற்பாடாகவே 1988 இல் நடைபெற்ற மாகாணசபைகளுக்கான தேர்தல்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சி பகிஷ்கரித்தது.

1987 இல் கொண்டுவரப்பட்ட மாகாணசபைத் திட்டத்தை தமிழ் கட்சிகளும் தமிழ் பொது மக்களும் ஒரு பகிடியான விடயம் என்றே எடுத்துக் கொண்டனர். செயற்பாட்டிலும் அந்த மாகாணசபை நடைமுறை அப்படித்தான் அமைந்துவிட்டது.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைவராக விளங்கியவர் குருநாகல் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவராவர். ஆனால் 1987இல் கொண்டுவரப்பட்ட மாகாணசபை முறை அவ்வாறானதல்ல. அந்த முறையின் கீழ் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டது. இருப்பினும் அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடுப்பதில் மேற்கூறப்பட்ட எதிர்ப்புச்சக்திகள் வெற்றி கண்டன. அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸாவும் இந்த எதிர்ப்புச் சக்திகளின் அழுத்தங்களுக்கு இரையானார். 1988 இல் வடக்குக் கிழக்கு மாகாண சபையின் நிர்வாகம் மாத்திரமன்றி ஏனைய மாகாண சபைகளின் நிர்வாகங்களும் பிரேமதாஸாவால் முடக்கப்பட்டன.

தற்போதைய உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தங்களுக்கு ஜே.வி.பி. தரப்பிலிருந்தும் எதிர்ப்பு உருவாகியுள்ளது. 1987-90 காலப்பகுதிகளில் மாகாணசபை முறைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியவர்கள் ஜே.வி.பியினரேயாவர். மாகாணசபை முறைக்கு எதிரான நிலைப்பாட்டைத் தற்போதும் ஜே.வி.பியினர் கொண்டுள்ளனர். உத்தேச அரசமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் சமஷ்டி அரசியல் முறை உருவாகலாம் எனவும் எனவேதான் தாங்கள் அதனை எதிர்ப்பதாகவும் அண்மையில் ஜே.வி.பியினர் தாம் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தெரிவித்துள்ள எதிர்ப்பானது எப்போதாவது ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஒழுங்கமைந்த எதிர்ப்பு அலையாகவும் மாறக்கூடும். நோர்வே நாட்டின் தீர்வு முயற்சிகள் தொடர்பாக இதுவரை எதிர்த்து வந்தவர்கள் ஜே.வி.பியினர் என்பதை மறந்துவிடக்கூடாது. ஜே.வி.பியினர் சிங்கள உறுமய கட்சியினர் போல் அரசமைப்புச் சீர்திருத்தங்களை வெறுமனே எதிர்க்கவில்லை. ஜே.வி.பியினர் தமது எதிர்ப்பில் அரசியல் மற்றும் பொருளாதாரச் சுலோகங்களையும் சேர்த்துள்ளனர். அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளுக்கு எதிராக அந்த அமைப்பு மேற்கொண்டு வரும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை அடுத்து, தீர்வுத் திட்டத்திற்கு எதிரான எதிர்ப்பை ஜே.வி.பியினர் வளர்க்க வாய்ப்புக்கள் உள்ளன.

**தமிழில்:- கஜனி**

அரசின் தீர்வுத் திட்டமானது நாட்டைத் துண்டுபோடும் எனவும் எனவேதான் தாங்கள் அதனை எதிர்ப்பதாகவும் தென் பகுதி சிங்களவர்கள் கூறுகின்றனர்.

தனிநாட்டிற்காகப் போராடும் விடுதலைப் புலிகளோ இந்தத் தீர்வுத் திட்டமானது தங்களது அபிலாஷைகள் எவற்றையும் நிறைவேற்றுவதாக இல்லை என்கிறார்கள். உண்மையான நிலைதான் என்ன?

இந்த நிலைப்பாடுகள் இரண்டும் சரியாக இருக்க முடியாது. ஒன்றில் இந்தத் தீர்வுத் திட்டத்தினால் நாடு துண்டாடப்படுவதாக அமையலாம். அல்லது ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதாக அது அமையலாம்.

1957,1966,1981,1987 ஆகிய ஆண்டுகளில் நாடு துண்டாடப்பட்டிருக்கும் எனக் கூறப்பட்டாலும் அவ்வாறு இடம்பெறவேயில்லை என்பதை தற்போது நாமறிவோம். 1981ஆம் ஆண்டின் மாவட்ட அபிவிருத்தி சபை முறையின் மூலமும் அல்லது 1987 இல் மேற்கொள்ளப்பட்ட அரச அமைப்பிற்கான 13ஆவது திருத்தத்தின் மூலமும் இந்த நாடு துண்டாடப்பட்டுவிட்டது என்பது போன்ற - அடிப்படைகள்அற்ற - விதத்தில் எதிர்ப்புகளைத் தெரிவிக்கின்றனர். நாடு துண்டாடப்படுவதற்கு அல்லது தனி நாட்டிற்கான கோரிக்கை உருவாவதற்கான முக்கிய காரணம் 1957-2000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உரியமுறையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படாததும் நடைமுறைப்படுத்தப்படாததுமேயாகும்.

இன்று அதிகரித்துவரும் போர்ச் சூழ்நிலையின் மத்தியிலும், யுத்தத்திற்கே முன்னுரிமை வழங்கும் அரசாங்கத்தின் பின்னணியின் மத்தியிலுமே இந்தத் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படுகிறது. யுத்தம் அரசின் நோக்கமாக அமைந்துள்ளது. ஆனால் யுத்தத்திற்கான வசதிகள், வழங்கல்கள் மற்றும் யுத்தம் தொடர்பான உளத்திடத்தை வளர்த்தல் ஆகியன இன்று சமாதான விரோதச் செயல்களாகியுள்ளன. உண்மையில் அரசாங்கம் நடைமுறைப்படுத்துவது சிங்கள இனவாதச் சக்திகளிடம் கடனாகப் பெற்ற அல்லது சூறையாடிய போரார்வ எண்ணங்களையும் திட்டங்களையுமே ஆகும். சிங்கள இனவாதிகளிடமிருந்து கடனாகப் பெற்ற திட்டங்களுக்காக அரசாங்கம் அவர்களுக்கு வட்டியுடன் மீளளிக்க வேண்டிய வரலாற்றுச் சம்பவம் உருவாகும். அதாவது தங்களது அரசியல் தீர் வுத்திட்டம் பிறக்கும்போதே அதன் நோக்கமான சமாதானத்தை உருவாக்காமல் அதை வெளியே எடுப்பதாகும். யுத்தத்தில் பயன்படுத்தும் புதிய ஆயுதமாக தீர்வுத்திட்டம் விளங்குகிறது. அவ்வாறு அமையக் கூடாது என்பதே எமது பிரார்த்தனை. இருப்பினும் பிரார்த்தனைகளிலும் பார்க்க சக்திகளுக்கு அதிக ஆற்றல்கள் உண்டு என்பது வரலாற்றுக் கண்கூடு.

## தடுப்பூசி மருந்துகள் பழுது

குருநகர் அரசினர் ஆஸ்பத்திரியில் குளிரூட்டிகளில் வைக்கப்பட்டிருந்த தடுப்பூசி மருந்துகள் யாவும் மின்சாரம் தடைப்பட்டு இருந்த சமயம் பழுதடைந்துள்ளதாகவும் கொழும்பில் இருந்து புதிய தடுப்பூசி மருந்துகள் கிடைக்கும் வரை கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசி மருந்தை வழங்க முடியாதுள்ளதாகவும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி ச.திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

வெளிநோயாளர் பிரிவில் சுமார் எண்பது பேரும், கர்ப்பிணித் தாய்மார்கள் சுமார் 10 பேரும் நாளாந்தம் இங்கு சிகிச்சை பெற்று வருவதாகவும் இவர் மேலும் தெரிவித்தார்.


MILLENNIUM RESTAURANT

மிலேனியம் ரெஸ்ரோறன்ற்

எம்மிடம்...

(B) புரியாணி, (F) பிறைட்றைஸ், நூடில்ஸ், டெவில், (F) பிறைட் வகைகளும், உள்நாட்டு, வெளிநாட்டு உணவு வகைகளும் உடனுக்குடன் தயார் செய்து கொடுக்கும் ஒரேயொரு ஸ்தாபனம்

தயாரிப்பாளர் : B.L MAHESHAN

※ விருந்துபசாரங்களுக்கான ஓடர்கள் முன் கூட்டியே பதிவு செய்யவும். ஓடர்கள் விசேடமாகக் கவனிக்கப்படுகின்றன.

※ விசாலமான, சுகாதார வசதிகொண்ட இடவசதியும் கண்ணைக் கவரும் இயற்கை எழில் நிறைந்த பூஞ்சோலையும் அலங்கார மின்விளக்குகள் அழகும் நிறைந்து விளங்கும் ஒரே இடம்

கண்ணன் குளிர்ச்சோலை

இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

இல70, இராமநாதன் வீதி,
(பல்கலைக்கழக வீதி)
கலட்டி, யாழ்ப்பாணம்.

(76186)

# நமது நாட்டுக்குள் புகு
# 'பாதீனியம்' என்ற வடிவி



பாதீனம், அதன் இயற்கைச் சூழலில்
(PARTHENIUN IN ITS NATURAL HABITAT)

எண்பதுகளில் (சென்ற நூற்றாண்டு), கோப்பாய்ச் சந்தியில், சோதனைச் சாவடியில் தரித்து நின்றபோது, பரிச்சயம் இல்லாத ஒரு தாவர இனம் கூட்டமாக நிற்பது என் மனதைக் கவர்ந்தது. ஆயினும் அதை ஆராயக் கூடிய சூழ்நிலை அப்பொழுது இல்லை. தொடர்ந்தும் கோப்பாய்ப் பிரதேசத்தில் இதைக் கண்டாலும் ஆராயக்கூடிய சந்தர்ப்பம், சூழ்நிலை, கிடைக்கவில்லை. அது ஒரு பிரச்சினைக்குரியதாக மாறும் என்று நான் அப்போது எதிர்பார்க்கவில்லை. எமது அவதானங்களைப் பொறுத்தவரை தற்போது இது யாழ் - பருத்தித்துறை வீதி நெடுகிலும் பரவியுள்ளது. பிற இடங்களுக்கும் பரவியிருக்கலாம். இருபாலை, கோப்பாய்ப் பகுதிகளில் பரவலாக,அதிகமாகக் காணப்படுகிறது. ஏனைய இடங்களில் தோட்டங்களிலும், அண்டிய இடங்களிலும் காணப்படுகின்றது. யாழ். வளாகத்திலும் உண்டு.

இது I.PK.F. எமக்கு விட்டுச் சென்ற 'சொத்து'. அவர்களின் பிரச்சினை தீர்ந்துவிட்டது(?); ஆனால் அவர்கள் விட்டுச் சென்றது பெரும் பிரச்சினையாக மாறி விஸ்வரூபம் எடுத்துள்ளது. இச்செடி பாதீனியம் ஹிஸ்ரீறோபோறஸ்(PARTHENIUM HYSTEROPHORUS) என இனங்காணப்பட்டுள்ளது.

அதற்கு நம்மவர்கள் கொடுத்துள்ள பெயர் "இந்தியக்களை" (LOCAL NAME:-"INDIAN WEED"), பொருத்தமான பெயர்.

இதன் பொதுப் பெயர்கள் (COMMON NAMES அதாவது ஆங்கிலப்பெயர்கள்):- "வெண்தலை" (WHITE HEAD), "வெண் விளக்குமாற்றுக் களை" (WHITE BROOM WEED), "புழுமரம்" (WORM WOOD), "குவளைப் பூண்டு" (MUG WORT) ஆகியவை.

### இது ஏன் பிரச்சினைக்குரியது?

இது தொற்றிய இடத்தில் விரைவில் ஆட்சியை (DOMINANCE) மேற்கொள்வதுடன், தனி இன உச்சங்களையும் (MONOSPECIFIC CLIMAX) தோற்றுவிக்கும் இயல்புடைது. பயிர்ச் செய்கைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், உள்ளூர் இனங்களை அடக்கி ஒடுக்கிவிடும். இயற்கை வளத்தைப் பெரிதும் பாதிப்பதுடன், தாவர இன பல்வகைமையை (PLANT SPECIES DIVERSITY) ஒடுக்கும். நமது மூலிகைத் தாவர இனங்களின் வளத்தைப் பெரிதும் பாதிக்கும்.

ஆர்வமுள்ளவர்கள் மாத்திரமல்லாமல் பொதுமக்களும் இப்பிரச்சினையில் அக்கறை காட்டுவது அவசரமானதும் அவசியமானதும் ஆகும். அல்லது நமது சூழலில் திருத்த முடியாத அளவிற்கு இதனால் பெரும் பாதிப்பு ஏற்படலாம்.

இதன் மகரந்த மணிகள் ஏனைய தாவரங்களில் கருக்கட்டலையும் கனிகொள்ளலையும் பாதிப்பதாகத் தெரிகின்றது. பயிர்த்தாவரங்களை மாத்திரமல்லாமல், ஏனைய தாவரங்களையும் இது எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதைப் புலப்படுத்தும். மேலும் இதனால் சுரக்கப்படும் நச்சுத்தன்மையான பொருள் சொறியும் தன்மையுடையதாக இருப்பதுடன், தோலில் நமைச்சலையும் மற்றும் தோல் பிரச்சினைகளையும் (DERMATITIS) ஏற்படுத்தும் எனத் தெரிகின்றது.

### புறநாட்டுத் தாவரங்கள் (EXOTICS)

ஒரு நாட்டில் புகுத்தப்பட்ட தாவரங்கள் "எக்ஸ்கோரிக்ஸ்" என அழைக்கப்படும். இவை சாதகமான பலன்களையும் தரலாம்; பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தலாம். இத்தகைய தாவரங்கள் பல வழிகளில் புகுத்தப்படலாம்.

சில தற்செயலாகப் புகுந்தவையாகும். உதாரணமாக, அரேபியர்கள் ஈழத்துடன் வாணிபத்தில் ஈடுபட்ட காலத்தில், ஒட்டகத் தீனியாகக் கொண்டுவரப்பட்ட தாவரங்களுடன் தரப்பட்ட *உயாய்* அல்லது *விசாய்* அல்லது *வியாய்* (SALVADORA PERSICA - SALVADORA CEAE) என்ற தாவரம் இலங்கையில் நிலைகொண்டு இப்பொழுது உலர்வலயத்திலும், கடற்கரைப் பிரதேசங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது. இதேபோலத்தான் ஆனைப்புளி அல்லது பப்பரப்புளி அல்லது பெருக்கு (ADANSONIA DIGITATA - BOMBACACEAE) என்ற மரமும் புகுந்துள்ளது. இவற்றினால் பாதகமான விளைவுகள் எதுவுமில்லை. வன்னிப் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட எருவுடன் வந்த மரு ஓமத்தை அல்லது ஆனை ஒட்டொட்டி (XANTHIUM STRUMARIUM - COMPOSITAE) யாழ். குடாநாட்டில் பரவி பிரச்சினைக்குரியதாக மாறிவிட்டது. இப்பொழுது எரு இறக்குமதி பல ஆண்டுகாலமாக நின்றுபோய்விட்டது. ஆயினும் மரு ஓமத்தை மருட்சியைத் தந்து கொண்டேயிருக்கின்றது. இதேபோலத்தான், மைசூர் சமஸ்தானத்தில், *மிர்சா* என்பவர் திவானாக இருந்த காலத்தில், அரண்மனைக் குதிரைகளுக்கு (அரேபியக் குதிரைகள்) பேர்சியாவிலிருந்து புல் வரவழைக்கப்பட்டது. புல்லுடன் சேர்ந்து ஒரு முட் பூண்டின் விதைகளும் வந்துவிட்டன. இத்தாவரம் மைசூரில் மாத்திரமல்லாமல் இந்தியா முழுவதும் பரவிவிட்டது; இலங்கையிலும் பரவலாக உண்டு. இதற்கு "மிர்சா முள்" என்ற பொருத்தமான பெயரைச் சூட்டியுள்ளார்கள். இங்கு 'செருப்படை' அல்லது 'சிறு செருப்படை' என்று அழைக்கின்றார்கள். இன்னும் பல உதாரணங்கள் உண்டு. அவற்றில் சில எதேச்சையாக இங்கு தரப்பட்டுள்ளன:-

சில தாவர இனங்கள் பொருளாதார நோக்கத்தோடு புகுத்தப்பட்டவையாகும். எமது சாதாரணப் பயிர் தாவரங்களில் பல புறநாட்டுக்குரியவையாகும் - உதாரணமாக தக்காளி, (LYCOPERSICUM ESCULENTUM / SOLANUM LYCOPERSICUM-*SOLANACEAE)*, உருளைக்கிழங்கு (SOLANUM TUBEROSUM - *SOLANACEAE*), பறங்கிக்காய் (CUCURBITA MAXIMA - *CUCURBITACEAE*), முள்ளங்கி (RAPHANUS SATIVUS - *PAPAVERACEAE*), கரட் (DAUCUS CAROTA - *UMBELIFERAE*), பீற்றுக்கிழங்கு (BEETA VULGARIS - *CHENOPODIACEAE*), புகையிலை (NICOTIANA TABACUM - *SOLANACEAE*) போன்றவற்றோடு இன்னும் பல.

சில பொருளாதார நோக்கத்தோடு, களவாடப்பட்டு கொண்டுவரப்பட்டவை. உதாரணமாக இரப்பர் (HEVEA BRASILIENSIS - *EUPHORBIACEAE*) மர விதைகள் களவாக பிறேசில் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு, இலங்கையில் முளைக்கவைத்து, மலேசியாவிலும் இலங்கையிலும் புகுத்தப்பட்டன. இப்பொழுது யாழ்குடாநாட்டில் தாராளமாகக் கிடைக்கும் நல்லினத் திராட்சைக் (VITIS VINIFERA) கொடிகளின் மூலத்தடிகள் இஸ்ரேலிலிருந்து களவாகக் கொண்டுவரப்பட்டவையாகும்.

சில தாவர இனங்கள் வேறு காரணங்களுக்காகப் புகுத்தப்பட்டவையாகும்.

முதலாவது உலக மகாயுத்தத்தின்போது இலங்

## இந்திய அமைதிப்படையுடன் சேர்ந்து 'நைஸாக' ஊடுருவல்

கையிலுள்ள உள்நாட்டு நீர்நிலைகள் எதிரியின் கடல் விமானப்படைக்கு (SEA PLANES) தெரியாமலிருப்பதற்காக நமது நாட்டு நீர் நிலைகளில் சில தாவர இனங்கள் புகுத்தப்பட்டன (கடல் விமானங்களினால் நீரில்தான் தரிக்கவும் எழவும் முடியும்). இங்ஙனம் புகுத்தப்பட்டவைதான் அந்தரத் தாமரை அல்லது ஆகாசத்தாமரை (PISTIA STRATIOTES - *ARACEAE*), நெய்த்தாமரை (EICHORNIA CRASSIPES - *PENTEDERIACEAE*), சல்வீனியா பன்னம் (SALVINIA) போன்றவை.


இங்ஙனம் தாவரங்கள் புகுவதற்கு மனிதன் நேரடியாகவோ மறைமுகமாகவோ காரணமாயிருக்கலாம். பறவைகள், காற்று, நீர் போன்ற இயற்கைக் காரணிகளாலும் தாவரங்கள் புகுத்தப்படலாம். இவையும் பயனுள்ளவையாக அமையலாம்; அல்லது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துபவையாக அமையலாம்.

### பாதீனியா புகுந்த முறை

பாதீனியத்தின் ஆரம்பமும் புகுந்த முறையும்-சரித்திரமும் (HISTORY - ORIGIN AND MODE OF INTRODUCTION OF PARTHENIUM):-

கொம்போசிற்றே (COMPOSITAE/*ASTERACEAE*) குடும்பத்திலுள்ள அநேக களைகளைப் போல பாதீனியமும் ஒரு கேடு தருகின்ற (NOXIOUS) களை; முக்கியமாகக் காற்றினால் பரவப்படும்; விலங்குகளினாலும் பரவப்படும். இதன் ஆரம்பம் (ORIGIN) அநேகமாக மேற்கிந்தியத்தீவுகள் (WEST INDIES) ஆக இருக்கலாம். ஆயினும் இது அமெரிக்க கண்டங்களின் அயன மண்டலப் பிரதேசங்களுக்கெல்லாம் பரவிவிட்டது - புளோறிடா(FLORIDA)விலிருந்து ரெக்சாஸ் (TEXAS) வரையும், சிலியில் (CHILE) இருந்து ஆர்ஜென்ரீனா (ARGENTINA) வரையும்.

இது புதிய உலகத்திற்கு (NEW WORLD) உரிய




தாவரமாக இருந்தாலும், பழைய உலகத்திலும் (OLD WORLD) இதைப்பற்றி அறிந்திருந்தார்கள்; ஆயினும் 1810 வாக்கில் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமைத் தானியங்களுடன் அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்குள் இது புகுந்துவிட்டது என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். சில இந்திய மாநிலங்களில், சிறப்பாக தென்னிந்தியாவில், இது முக்கியமான ஆட்சியுள்ள இனமாக மாறிவிட்டது.

இலங்கையில் பாதீனியம் காலடி வைத்தது I.P.KF. நிலையங்களை (CANTONMENTS) அண்டி - சிறப்பாக வவுனியாவிலுள்ள விவசாயப் பாடசாலை (AGRICULTURAL SCHOOL), அரச விதை உற்பத்திக் கமம் (GOVT. SEED FARM), விவசாய ஆராய்ச்சி நிலையம் (AGRICULTURAL RESEACH STATION) ஆகிய பகுதிகளில் முதல் விதைகள், I.P.K.F. இனருக்கு உணவாக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஆடுகள் மூலமாக, அவற்றின் புழுக்கை (FAECAL PELLETS) மூலமாக வந்திருக்க வேண்டும் என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். விதைகள் (கனிகள்) ஆடுகளின் உரோமத்தில் ஒட்டிக் கொண்டும் வந்திருக்கலாம். I.P.K.F. வினருக்காக தருவிக்கப்பட்ட கடுகு (MUSTARD) மூலமாகவும் தற்செயலாகப் புகுந்திருக்கலாம் என்பது மற்றுமொரு ஐயப்பாடு. கடுகுடன் பாதீனியம் விதைகள் தற்செயலாகக் கலந்திருக்கலாம்; அல்லது வியாபாரிகள் இலாபநோக்கம் கருதி வேண்டுமென்றே கலந்திருக்கலாம் (ADULTRATION)

எப்படியோ பாதீனியம் இலங்கையில் புகுந்து விட்டது. வளர்ச்சி வவுனியாவில் அவதானிக்கப்பட்டது. ஆயினும், I.P.K.F. பாசறைகள் (CAMPS) இருந்த, வடமாகாணத்தின் ஏனைய பிரதேசங்களிலிருந்து இச்செடி காணப்படுவதற்கான செய்திகள் இதுவரை அறிவிக்கப்படவில்லை (இருந்தும் உண்டு, விவரம் பின்னர்)

பாதீனியம் ஒரு மீற்றர் உயரம் வரை வளரும். ஒரு தாவரம் கிட்டத்தட்ட ஆயிரம் தலைகளைத் தோற்றுவிக்கும். ஒவ்வொரு தலையும் குறுகிய காலத்தில் பரந்த பிரதேசத்தில் பரவக்கூடிய, 2000முதல்3000 விதைகளைக் (கனிகளைக்) கொண்டிருக்கும். வவுனியா நகரத்தை அண்டிய இத்தாவரம் பயிர் செய்யுமிடங்களிலும், வெற்று நிலங்களிலும், புகைவண்டிப்பாதையோரங்களிலும், வீதியோரங்களிலும் வளருவது அவதானிக்கப்பட்டுள்ளது. விவசாய செயற்பாடுகளுக்கு ஊறு விளைவிக்கும் ஒரு பிரச்சினைக்குரிய களையாக இது உருவெடுத்துள்ளது. இதன் தொல்லை பொறுக்கமாட்டாத வவுனியா கமக்காரர்கள் இதைப் பல எழுத்தில் வடிக்க முடியாத பெயர்கள் கொண்டு அழைக்கிறார்கள்.



இளம் பாதீனியமும், பூந்துணர்களைக் கொண்ட கிளையும். இலைகளின் வேறுபாட்டைக் கவனிக்கவும். (தாவரச்சயத்திலிருந்து (HERBARIUM) பெறப்பட்ட படங்கள)

எதிர் பார்த்தபடியே, சென்ற வருடம் (1999) ஒக்ரோபரில், இக்களை கண்டி மாவட்டத்திலுள்ள பல்லேகல (PALLEKELE) வில் வளருவது அவதானிக்கப்பட்டது. அங்கு இவை செழிப்பான வளர்ச்சியைக் காட்டுகின்றன. இரண்டு மீற்றர் உயரம்வரை வளருகின்றன. ஒக்ரோபர் இறுதியில் பூத்தன; ஒரு புதிய சூழலில் இதன் வாழ்க்கை வட்ட முன்னேற்றத்தை இது உணர்த்துகின்றது. இப்பிரதேசத்திலுள்ள வெற்றிடங்களிலும், களை நிறைந்த வீட்டுத் தோட்டங்களிலும், இது காணப்படுகின்றது. இங்கு, இதன் விதை

கள், வவுனியாவிலிருந்து தருவிக் கறிகளுடன் வந்திருக்கலாம். எது எப்ப தூரத்திலுள்ள பல்லேகலவுக்கும் இது இது பரவுதையும் பெருகுவதையும் இப் இது விரைவில் பெரும் பிரச்சினைக் உருவெடுக்கும்.

வெள்ளாடுகளும், எருமைகளும் உண்ணும்; ஆனால் மாடுகள் இதைச் அதனால் தொற்றுதல் ஏற்பட்ட இடங் இடங்களுக்கு கால்நடைகளைக் கொ பாதீனியம் பரவுவதை ஊக்குவிப்பத கால்நடைகளின் மலம் வாயிலாக மா அவற்றின் உரோமத்திலும் ஒட்டிக் விதைகள் கடத்தப்படலாம்.


இக்களையின் மகரந்தங்கள் வேறு களின் குறியில் சேர்க்கப்பட்போது, அ டலும் கனிகொள்ளலும் நிரோதிக்க தானிக்கப்பட்டுள்ளது; எனவே இக்கள சாயப் பயிர்களின் உற்பத்தித் திறன் பாதிப்படைவதை அறியமுடிகிறது. இ சுரக்கப்படும் ஒருவகை இரசாயனப் பொ சொறிவையும், எரிவையும், நமைச்சலை யும் ஏற்படுத்தும் (அந்த அளவிற்கு இ காஞ்சோண்டியைப் போல்)

மேலும், விவசாய உற்பத்திக்குப் விப்பதோடல்லாமல், நமது நாட்டின் தா பல்வகைமையையும்(PLANT GEN SITY) இது பெரிதும் பாதிக்கும்; தற் யல் சமநிலையையும் பாதிக்கும்; சூழலியல் முக்கியத்துவம் பெறுவ அகற்ற வேண்டியதும் முக்கியத்துவ ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் பாதீ வரை, கண்ட இடத்திலெல்லாம் இதைப் விடவேண்டும். அத்துடன் இத்தாவர இடங்களைக் குறிப்பிட்டு உரிய இட விக்க வேண்டும்.

### தொல்லை தரும் இ

தொல்லை தரும் களைகளின் NATURE OF TROUBLESOME W

இலங்கையிலுள்ள பெரும்பாலான ப களைகள் புறநாட்டுக்குரியவையாகும் நடவடிக்கைகளின் பயனாகவே இங்கு ஏற்ற வாழிடத்தில் நிலையூன்றியதும்,




டுத் தாவரங்கள் விரைவாகப் பரவி, களில் ஆக்கிரமிப்பாளராக மாறி உ களை அவற்றின் இயற்கையான வல நிலைபெயரச் செய்வதுண்டு.

பாதீனியத்தின் ஆக்கிரமிப்புக்குரி விளைவிப்பதுமான தகைமைகள் (IN NOXIOUS POTENTIALS OF PA

இலங்கையில் விரைவாகவோ அ கவோ, ஓர் இயல்பான ஆக்கிமிப்பா குரிய இயல்புகள் பல பாதீனியத்தில் னமாக, மிக அதிக எண்ணிக்கையி தோற்றுவித்தல், விதைகள் இலே (PAPPUS)யுள்ளவையாகவும் இருத்த பமாகக் காற்றினாலும் விலங்குகளினா வெள்ளாடுகளும் எருமைகளும் இதை பரவலுக்கு உதவுதல், மனிதனின் மூலமும் பரவுதல், மேலும் இதன் ஏனைய இனங்களில் கருக்கட்டலை ளையும் நிரோதித்தல் (பாதீனியத் உதவியினால் மகரந்தச் சேர்க்கை நி கட்டலுக்கும் வாய்ப்புண்டு - இடமா வாயிலாக - MAKESHIFT ARRAN POLLINATION MECHANISM), இ இனங்களின் பெருக்கத்தை அடக்குதல் வாக வளர்ந்து, வேகமாக ஏனைய இ ஆட்சியை மேற்கொள்ளுதல். இதில் கும் இயல்புகளும் இருப்பதாகத் தெ

### பரவலைத் தடுக்கு

செயற்பாட்டிற்குரிய பரிந்துரைகள் ( ACTIONS):- விவசாயத்திற்கும் உ

# புகுந்திருக்கும் 'அந்நியர்'! வடிவில் வரும் பேராபத்து!!

ரியாவிலிருந்து தருவிக்கப்படும் காய் வந்திருக்கலாம். எது எப்படியோ, தொலை ள பல்லேகலவுக்கும் இது தொற்றிவிட்டது. தயும் பெருகுவதையும் இப்படியே விட்டால், வில் பெரும் பிரச்சினைக்குரியதொன்றாக தும்.


டுகளும், எருமைகளும் இதை விரும்பி ஆனால் மாடுகள் இதைச் சீண்டுவதில்லை. தாற்றுதல் ஏற்பட்ட இடங்களிலிருந்து பிற த கால்நடைகளைக் கொண்டு செல்வது பரவுவதை ஊக்குவிப்பதாக அமையும். ளின் மலம் வாயிலாக மாத்திரமல்லாமல், உரோமத்திலும் ஒட்டிக் கொண்டு இதன் கடத்தப்படலாம்.

யின் மகரந்தங்கள் வேறு இனத் தாவரங் ில் சேர்க்கப்பட்போது, அவற்றில் கருக்கட் கொள்ளலும் நிரோதிக்கப்படுவது அவ டுள்ளது; எனவே இக்களையின்றால் விவ ளின் உற்பத்தித் திறன் பெரிய அளவில் வதை அறியமுடிகிறது. இக்களையினால் ஒருவகை இரசாயனப் பொருள் தோலில் , எரிவையும், நமைச்சலையும், வீக்கத்தை தும் (அந்த அளவிற்கு இல்லாவிட்டாலும், ையைப் போல)

விவசாய உற்பத்திக்குப் பாதிப்பு விளை லாமல், நமது நாட்டின் தாவர பிறப்புரிமைப் மையையும்(PLANT GENETIC DIVER- பெரிதும் பாதிக்கும்; தற்போதைய சூழலி லையையும் பாதிக்கும்; அதனால் இது முக்கியத்துவம் பெறுவதுடன், இதை ண்டியதும் முக்கியத்துவம் பெறுகின்றது. ட்ட பிரதேசத்தில் பாதீனியம் மறையும் இடத்திலெல்லாம் இதைப் பிடுங்கி எரித்து . அத்துடன் இத்தாவரம் காணப்படும் குறிப்பிட்டு உரிய இடங்களுக்கு அறி டும்.

## ல்லை தரும் இயல்பு

ல தரும் களைகளின் இயல்புகள் - OF TROUBLESOME WEEDS):- யிலுள்ள பெரும்பாலான பிரச்சினைக்குரிய றநாட்டுக்குரியவையாகும்; இவை மனித களின் பயணாகவே இங்கு புகுந்துள்ளன. தில் நிலையூன்றியதும், இந்த வெளிநாட்




ள் விரைவாகப் பரவி, சில சந்தர்ப்பங் ரமிப்பாளராக மாறி உள்நாட்டு இனங் ின் இயற்கையான வலயங்களிலிருந்து செய்வதுண்டு.

தின் ஆக்கிரமிப்புக்குரியதும் கெடுதி ான தகைமைகள் (INVASIVE AND OTENTIALS OF PARTHENIUM):- ில் விரைவாகவோ அல்லது தாமதமா பல்பான ஆக்கிமிப்பாளராக மாறுவதற் ள் பல பாதீனியத்தில் உண்டு. உதார அதிக எண்ணிக்கையில் விதைகளைத் , விதைகள் இலேசாகவும் குடுமி ளவையாகவும் இருத்தல், அதனால் சுல ாலும் விலங்குகளினாலும் பரவப்படல், எருமைகளும் இதை விரும்பி உண்டு தவுதல், மனிதனின் உடை, உடல் தல், மேலும் இதன் மகரந்தமணிகள் களில் கருக்கட்டலையும் கனிகொள் ாதித்தல் (பாதீனியத்தில் பூச்சிகளின் மகரந்தச் சேர்க்கை நிகழும். தற்கருக் ாய்ப்புண்டு - இடமாறிப் பொறிமுறை AKESHIFT ARRANGEMENT OF N MECHANISM), இங்ஙனம் ஏனைய ருக்கத்தை அடக்குதல், மேலும், விரை வேகமாக ஏனைய இனங்களுக்குமேல் கொள்ளுதல். இதில் வரட்சியைத் தாங் நம் இருப்பதாகத் தெரிகின்றது.


## லைத் தடுக்கும் வழி

க்குரிய பரிந்துரைகள் (SUGGESTED விவசாயத்திற்கும் உயிர்ப்பல் வகை

மைக்கும் (BIODIVERSITY) பாதீனியத்தினால் ஏற் படக்கூடிய பாதிப்புக்களை கருத்திற்கொண்டு உடனடி யான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்பது அவசியமாகின்றது. குறிப்பிட்ட பிரதேசத்தில் தொடர்ந்து சில ஆண்டுகளுக்கு இதைக் கண்ட இடங்களில் பிடுங்கி எரிக்க வேண்டும் - அப்பிரதேசத்தில் இருந்து பாதீனியம் மறையும் வரை இதைச் செய்யவேண்டும்.

## யாழ் குடாநாட்டில் பாதீனியம்

யாழ் குடாநாட்டில் இதன் ஆரம்பமும் பரவலும் **(APPEARANCE AND SPREAD IN JAFFNA PENINSULA):-** சென்ற நூற்றாண்டில், எண்பதுக ளின் நடுப்பகுதியில் அல்லது கடைப்பகுதியில்(85-89).



இளந் தாவரம்
(YOUNG PLANT)

இது தோன்றியிருக்கலாம். இக்கால கட்டத்தில் கோப் பாய்ச் சந்தியை அண்மித்து சோதனைக்காகக் காத்தி ருக்கும்போது சுற்றயலில் முற்றிலும் பரிச்சயம் இல்லாத வொரு தாவர இனம் கூட்டமாக நிற்பதைக் கண்டேன். அன்றிலிருந்து எப்போதாவது அப்பிரதேசத்தை தாண் டும் போது குறிப்பிட்ட தாவர இனம் இருக்கின்றதா என்று பார்ப்பதுண்டு. அண்மையில்தான் அதை ஆராய்ந்து இனங்காணும் வாய்ப்புக் கிடைத்தது. பாதீனி யத்தைப் பற்றிய செய்தி அறிந்தபின் குறிப்பிட்ட தாவரம் பாதீனியமாக இருக்கலாம் என்ற ஐயறவுடன் ஆராய்ந்து உறுதிசெய்யக் கூடியதாக இருந்தது.

வாசகர்களின் வசதிக்காக தாவரம் இங்கே படங்க ளுடன் விவரிக்கப்பட்டுள்ளது. இத்தாவரம் இப்பொ ழுதும் இருபாலை, கோப்பாய் பகுதிகளில் மிக அடர்த் தியாக, ஆட்சிக்குரியதாக காணப்படுகின்றது. யாழ் - பருத்தித்துறை வீதியில் அச்சுவேலி வரை பரவியுள் ளது. இப்பகுதிகளில் சிறப்பாக தோட்டங்களிலும் அண்டிய பிரதேசங்களிலும் காணப்படுகின்றது. வேறு எங்கெல்லாம் பரவியிருக்கின்றதோ தெரியாது. முக்கிய மான, ஆய்விற்குரிய விடயம் இது.

## விவரணம் - (DESCRIPTION)

குடும்பம்(FAMILY):- COMPOSITAE/ ASTERACEAE - MIXTAE

சாதி(GENUS) :- PARTHENIUM.

இனம் (SPECIES):- (1) P.ARGENTATUM; பொதுப் பெயர் (COMMON NAME) - GUAYULE.

(2) P.HYSTEROPHORUS); பொதுப்பெயர் - WHITE HEAD / WHITE BROOM WEED / WORM WOOD / MUGWORT.

உள்நாட்டுப் பெயர் (LOCAL NAME) - 'INDIAN WEED" - இந்தியக் களை

## PARTHENIUM ARGENTATUM.

இதுவொரு தாழ்வாக வளரும் அதிக கிளைக ளையுடைய செடி. இயற் கையாக மெக்சிக்கோ (MEXICO)விலும் ஐக்கிய அமெரிக்காவின் (UNITED STATES) தென்பகுதிகளி லும் வளரும். இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது, இயற்கை இரப்பர் தரும் நாடுகளிலிருந்து அமெரிக்கா துண்டிக்கப் பட்ட போது, இதுவொரு இரப்பர் தரும் தாவரமாக முக்கியத்துவம் பெற்றது. இத்தாவரம் தொடர்பாகவும், அதன் பயிர்ச்செய்கை தொடர்பாகவும் நிறைந்த அளவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயி னும் இதிலிருந்து பெறப்ப டும் இரப்பர் குறைந்த

னால் இதை ஒரு முக்கியமான இரப்பர் தரும் தாவர மாகக் கொள்ள முடியாது. இத்தாவரம் இரண்டு அல்லது அதிகமான அடி உயரத்திற்கு வளரும்; அதிகமாகக் கிளையெறிந்திருக்கும்; தண்டுகள் வெள்ளி - நரை நிறம்; இலைகள் பலதரப்பட்டவை (VARIABLE); ஒன்றுவிட்ட ஒழுங்கு. பூக்கள் அடர்த் தியான தலைப்பூந்துணர்களில் இருக்கும். கதிர்ச்சிறு பூக்கள் (RAY FLORETS) வெள்ளை நிறம். தாவரம் பல்லாண்டுக்குரியது (PERENNIAL). ஏனைய இரப்பர் தரும் தாவரங்களில் உள்ளதுபோல இதில் இரப்பர் (மரப்பால்) குழாய்களிலோ (TUBES) அல்லது கலன் களிலோ (VESSELS) இருப்பதில்லை. ஆனால் கலங் களில் பரவலாக சிறுகோளங்களாக (GLOBULES) இருக்கும்; அதனால் இரப்பரைப் பெறுவதற்கு தாவ ரத்தை முழுமையாக அழிக்க வேண்டியிருக்கும்.

## PARTHENIUM HYSTEROPHORUS

உருவவியல் **(MORPHOLOGY)**

தோற்றம் (HABIT):- செடி, நிமிர்ந்தது; நிறையக் கிளையெறிந்தது; மயிர்செறிந்தது; வெள்ளி நரைநிறம் அல்லது வெளிறிய பச்சை. 1 முதல் 3 அடி உயரம் (பொதுவாக.)

வேர்கள் (ROOTS):- மூலவேர்த்தொகுதி; அதிகமா கக் கிளையெறிந்தது; அடர்த்தியானது.

தண்டு (STEM):- இளந்தாவரங்களில் பூண்டுக்குரியது; முதிர் தாவரங்களில் ஓரளவு வைரஞ் செறிந்தது (உறுதியானது); அடிப்பகுதியில் உருளை வடிவம். மேலே துலக்கமான தவாளிப்புடையது (GROOVED), முளைகளை அண்டி ஓரளவு கோணங் களையுடையது(நாற்பக்கவுரு).

இலைகள் (LEAVES):- தனியிலைகள்; ஒன்று விட்ட ஒழுங்கு; பல்வகைக்குரியவை (VARIED); பொதுவாகப் பலதரப்பட்ட ஆழங்களில் சிறைப்பிரிப்பான முறையில் வெட்டப்பட்டு சோணைகளை உடையவை யாகவிருக்கும். விளிம்பு பல்லுள்ளது. உச்சி கூர்மை யானது. மேலே உள்ள இலைகள் - சிறப்பாக பூந்து ணரச்சுக்களுடன் தொடர்பாக உள்ள இலைகள் - சோணையுள்ளவையாக, ஒடுக்கமானவையாக, தொடர் விளிம்புள்ளவையாக இருக்கும். ஆக மேலே உள்ள இலைகள் (தலைகளை அண்டி) சிறியவையாக, நேர் கோடு போன்றவையாக தொடர் விளிம்புள்ளவையாக இருக்கும்.

**K.S.KUGATHASAN,M.Sc.,**
(PRESIDENT, FIELD WORK CENTRE)
**Mrs J.NANTHAKUMAR, M.Phil.,**
(SENIOR LECTURER, DEPT.OF BOTANY, UNIVERSITY OF JAFFNA)

பூந்துணர் (INFLORESCENCE):- பூந்துணரச்சு, அதிகமாகக் கிளைத்தது; தலைகளில் முடிவடையும். தலைகள் வெள்ளை; சிறியவை; உயரம் 2 மி.மீ; விட்டம் 5 மி.மீ; கலப்பு. ஐந்து கதிர்ச்சிறு பூக்களையும், பல குழாய்ச் சிறுபூக்களையும் கொண்டிருக்கும். பாளைச்சுற்று ஐந்து பூவடியிலைகளைக் கொண்டது. ஒரு சுற்று, சுயாதீனமானவை; விளிம்பிற்றொடுபவை; பச்சை.

### பூக்கள் (FLOWERS)

வட்டத்தட்டுச் சிறுபூக்கள் அல்லது குழாய்ச் சிறு பூக்கள் (DISC FLORETS/ TUBULAR FLORETS):- நுண்ணியவை; ஒழுங்கானவை (ஆரைச்சமச்சீர்); இரு பாலுள்ளவை; சூலகமேல் நிலையானவை.

புல்லி வட்டம் (CALYX):- ஒடுக்கப்பட்டது; மயிர்போன்றது; பல; நிலைபேறானவை; கனியின் மேல் ஒரு குடுமியைத் தோற்றுவிக்கும் (கனிகள் காற்றினா லும் விலங்குகளினாலும் பரவ உதவும்).

அல்லிவட்டம்(COROLLA):- ஐந்து இணைந்தவை; விளிம்பிற்றொடுபவை; குழாயுருவானது; ஐந்து சோணை களையுடையது.


ஆணகம்(ANDROECIUM):- ஐந்து; அல்லிமே லொட்டியவை; மகரந்தக் கோடுகள் இணைந்தவை.

பெண்ணகம் (GYNOECIUM):- இரு சூல் வித்தி



**நன்றாகச் செழித்து வளர்ந்துள்ள பாதீனியம், பூத்துச் சொரிந்துள்ளது. ஒரு பூவில் (பூந்துணரில்) பல நூற்றுக்கணக்கான கனிகள் தோன்றும். ஒரு தாவரம் பல நூற்றுக்கணக்கான பூக்களைத் தோற்றுவிக்கும். ஒரு தாவரம் எவ்வளவு கனிகளை உற்பத்தி செய்யும் என்பதை நீங்களே அனுமானியுங்கள்.**

**பாதீனியத்துடன் நாட்டப்பட்டுள்ள தடியின் உயரம் இரண்டரை அடிகள். பாதீனியம் வளைந்து நெளிந்து உள்ளது. அதன் உயரம் 3 அடிகள் வரை இருக்கும்.**



**பூக்கவாரம்பித்துள்ள இளம் பாதீனியம்.**

லைகள்; சூல் வித்திலைகள் இணைந்தவை; ஓரறை யுள்ளவை; ஒரு சூல் வித்து - அடிக்குரிய சூல்வித்த மைப்பு; தாழ்வுச் சூலகம். தம்பம் ஒன்று. குறி இரு சோணையுள்ளது.

கனி (FRUIT):- குழிவுக் கலனி; முடிக்குரிய குடுமி யுள்ளது; காற்றினாலும்; விலங்குகளினாலும் பரவப்ப டும்.


கதிர்ச்சிறு பூ அல்லது நாவுருச்சிறு பூ (RAY FLORET / LIGULATE FLORET):- ஒழுங்கற்றது (இருபக்கச் சமச்சீரானது); பெண் பூ, நாக்குப் போன் றவை. இரு உதடுகளை உடையவை; சூலகமேல் நிலையானவை.

புல்லிவட்டம் (CALYX):- குழாய்ச்சிறு பூவில் உள் ளதுபோல.

அல்லி வட்டம் (COROLLA):- நாக்குப் போன்றது அல்லது உதடு போன்றது; ஐந்து இணைந்தவை; விளிம்பிற்றொடுபவை; ஈருதடுள்ளவை; மேலுதட்டில் இரண்டு இதழ்கள், கீழு தட்டில் மூன்று. கீழுதடு துலக்கமாக இரு சோணைகளை உடையது.

ஆணகம் (ANDROECIUM):- இல்லை.

பெண்ணகம் (GYNOECIUM):- குழாய்ச் சிறு




பூவில் உள்ளது போல.

கனி (FRUIT) - குழாய்ச்சிறு பூவில் உள்ளது போல.

### நாம் செய்ய வேண்டியது

நாம் செய்ய வேண்டியது என்ன?

பாதீனியத்தை கண்ட இடங்களில் அழித்தல் வேண் டும். சூழலுக்குப் பாதிப்பு இல்லாத சிறந்த வழி இவ் வினத்தாவரங்களைப் பிடுங்கி புதைத்து விடுதல்; சுலபமான வழி தாவரங்களைப் பிடுங்கி எரித்து விடு தல். களை மறையும் வரை இதைத் தொடர்ந்து செய்யவேண்டும்.

பாதீனியம் தொடர்பான தகவல்களைத் தந்து உதவுதல். பின்வருவம் முறையில் இதைச் செய்யலாம்:-

1. கண்டவர் பெயர்:-
2. காணப்பட்ட இடம்:-
3. அடர்த்தி அல்லது ஐதாகவுள்ளது பற்றிய விவ ரம்:-
4. பரவலாக அல்லது சிதறலாகவுள்ள விவரம்:-
5. ஆட்சிக்குரியது பற்றிய விவரம்:-
6. இது உள்ள இடத்தில் ஏனைய இனங்களின் நிலை:-
7. ஓரின உச்சங்கள் காணப்படுகின்றனவா? (பாதீனியம் மாத்திரம் உள்ளதா?)
8. பிரச்சினைக்குரியதாகத் தென்படுகின்றதா?

(உயர்தரவகுப்பு மாணவர்கள் இதை ஒரு செய்

# இடமாற்றத்தை ஏற்க மறுக்கும் ஆசிரியர்கள் பதவி நீக்கப்படுவர்

## கல்வி அமைச்சர் கண்டிப்பான உத்தரவு

கொழும்பு,ஜூலை5

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்காக இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட பாடசாலையில் கடமை ஏற்காது விட்டால் அவர்கள் பதவியில் இருந்து தாமாகவே விலகியவர்களாகக் கணிக்கப்படவிருக்கின்றனர்.

இது தொடர்பான கண்டிப்பான உத்தரவை கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரன தெரிவித்துள்ளார்.

பிராந்தியக் கல்வி அலுவலகங்களுக்கு அமைச்சர் இது விடையமான சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார்.

இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் புதிய பாடசாலைக்குச் செல்ல தாமதம் காட்டுவதால் கல்விநிலை பாதிக்கப்படுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே அமைச்சர் இந்த உத்தரவை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# 'உதயன்' மீதான தடை கவலைக்குரிய விடயம்

## சமாதானத்துக்கான நல்லெண்ணக் குழு

உதயன் பத்திரிகை பலவிதமான செய்திகளையும் உடனுக்குடன் வெளியிட்டு சமூகத்துக்கு பெரும் தொண்டு ஆற்றி வருகிறது. இதற்கு தடை விதிக்கப்பட்டது கவலை அளிக்கிறது.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு தபால் தொலைத்தொடர்பு மற்றும் ஊடகவியல்துறை அமைச்சர் மங்கள சமரவீராவுக்கு கடந்த மாதம் அனுப்பி வைத்த கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

தென்னிலங்கையில் வெளியாகும் பத்திரிகைகள் யாழ்ப்பாணத்தில் கிடைப்பதில்லை. இந்த நிலையில் உதயன் பத்திரிகையே செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு வருகிறது. அத்துடன் பொதுமக்களின் நலனுக்காக தகவல்களை வெளியிட்டு வரும் அதேவேளை மாணவர்களின் நன்மை கருதி ஆக்கங்களையும் பிரசுரித்து வருகின்றது.

ஆகவே இந்த பத்திரிகை மீதான தடையை நீக்குவதற்கும் பத்திரிகை மீண்டும் பிரசுரமாவதற்கான அனுமதியை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கோருகிறோம்.

தற்போதைய நிலையில் யாழ்ப்பாணத்தில் தணிக்கை அதிகாரியை நியமிக்கலாம் என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

- இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# யாழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றி வந்த 'உதயன்'

## தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை5

தென் இலங்கையிலிருந்து வரும் தேசியப் பத்திரிகை எதுவும் யாழ்ப்பாணத்தில் கிடைப்பதில்லை. இந்த நிலையில் உதயன் பத்திரிகை யாழ்ப்பாண மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகிறது. இந்தப் பத்திரிகைக்குத் தடைவிதிக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கடந்த மாதம் எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

சமுதாயத்தில் பத்திரிகைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பொது மக்கள் பத்திரிகைகளை வெறும் செய்திகளுக்காக மட்டும் வாசிப்பதில்லை. விளம்பரங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்காகவும் பத்திரிகையை வாசிக்கிறார்கள். யுத்தச் செய்திகள் இரண்டாவது இடத்தையே வகிக்கின்றன.

ஆகவே உதயன் பத்திரிகை மீதான தடை உடனடியாக நீக்கப்படவேண்டும் என்று கோருகிறோம்.

- இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-இ)


என்றென்றும் உங்கள் மனதில் நீங்கா இடம்பிடித்த

நியூ லலிதா ஜுவல்லர்ஸ்,

170, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(ராஜா திரையரங்கு முன்பாக)

என்னும் முகவரியில் வழமைபோல் இயங்கிவரும் எமது ஸ்தாபனம் மக்களின் நன்மைகருதி கிளை நிறுவனம் ஒன்றை இல. 23, K.K.S. வீதி சுன்னாகம் என்னும் முகவரியிலும் ஆரம்பித்துள்ளது என்பதனை அனைவருக்கும் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கின்றோம்.

உங்கள் தேவைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.



நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

170, கஸ்தூரியார் வீதி;
யாழ்ப்பாணம்.

23, K.K.S. வீதி,
சுன்னாகம்.

(76179)


## சமய சந்நிதி

திருநெல்வேலி அருள்மிகு முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் கடந்தமாதம் 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை வியாழக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-103)

❖ ❖ ❖ ❖

நல்லூர் ஸ்ரீபாலகதிர்காம தேவஸ்தான வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். உற்சவம் தினமும் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும். (ஐ-103)

## புதிய கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை5

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் புதிதாக நிறுவப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் நேற்று முன்தினம் பாடசாலை நிர்வாகத்தால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கட்டடத்தில் மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொடர்பான கற்கை நெறி வகுப்புக்கள் நேற்று முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

கடந்த பல ஆண்டுகளின் பின்னர் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு இந்த நிர்மாண உதவி வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

## துறைமுகப் பாலம் சேதம்

நெடுந்தீவு,ஜூலை5

குறிகாட்டுவான் துறைமுகப் பாலம் பழுதடைந்த நிலையில் உள்ளது. பாலத்தின் பல பகுதிகளில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் பாரத்துடன் செல்லும் வாகனங்கள் துறைமுகப்பாலத்தின் ஓரமாகச் சென்று பொருள்களை இறக்கவோ ஏற்றவோ முடியாதுள்ளது.

நெடுந்தீவு, நயினாதீவு பல நோ. கூ.சங்கங்களுக்கான பொருள்களை எடுத்துச் செல்லும் பாரஊர்திகள் பெரிதும் சிரமங்களுக்கு உட்படுவதாகவும் பயணிகள் படகுகளில் ஏறி இறங்குவதும் படகுகளைத் துறைமுகத்துடன் அணைப்பதும் கஷ்டமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-111)

## 30 குடும்பங்கள் தஞ்சம்

யாழ்ப்பாணம்,ஜூலை5

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் 30 குடும்பங்களைச் சேர்ந்த நூறுக்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளனர்.

இவர்களை கல்லூரிக்கு அண்மையிலுள்ள காணிகளில் சிறு கொட்டகைகள் அமைத்து அவற்றில் குடியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

## மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூலை5

யாழ். மநகரசபை எல்லைப் பகுதிக்குள் வசிக்கும் மக்களுக்கு 'மாக்கெற்' எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று மண்ணெண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

நிவாரண அட்டைக்கு ஐந்து லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. இதனைப் பெற்றுக்கொள்வதற்கு சிறுவர், பெண்கள், முதியோர் எனப் பலரும் காலை முதல் நண்பகல் வரை வெயிலையும் பொருட்படுத்தாது நீண்ட வரிசையில் காணப்பட்டனர். (ஐ-9)

## அகற்றப்பட்டது

இடம்பெயர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தற்காலிகமாக வசித்து வந்தவர்களுக்காக அங்கு அமைக்கப்பட்ட தற்காலிக மலசலகூடத்தொகுதி சுகாதாரம் பேணுவதற்காக தற்போது அகற்றப்பட்டுள்ளது. (ஐ-8)

# கல்விசாரா ஊழியருக்கான புதிய நியமனங்கள் நிறுத்தம்

## மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை

திருகோணமலை,ஜூலை5

வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகள் மற்றும் கல்வி அலுவலகங்களில் கல்விசாரா ஊழியர்கள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோருக்கு நிலவும் வெற்றிடங்களுக்குப் புதியவர்களை நியமிக்கும் பணி மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளது.

மாகாணக் கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சுச் செயலாளர் க.பரமேஸ்வரன் இது தொடர்பான பணிப்புரையை வலயப் பணிப்பாளர்களுக்கு விடுத்துள்ளார்.

இந்த வெற்றிடங்களை நிரப்ப எந்தவிதமான சிபார்சையும் மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்ப வேண்டாம் என்றும் அவர் தமது பணிப்புரையில் தெரிவித்துள்ளார். (இ-3)

# இரு புதிய பவுஸர்கள் விரைவில் வந்து சேரும்

யாழ்ப்பாணம்,ஜூலை5

வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு இரு புதிய பவுசர்கள் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படவுள்ளன.

ஒவ்வொன்றும் 13 ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளளவு கொண்ட இந்த பவுசர்கள் விரைவில் யாழ்ப்பாணம் வந்து சேரும் என யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் தெரிவித்தார்.

தற்போது நான்கு பவுசர்கள் யாழ்.மாவட்டத்துக்குரிய எரிபொருள்களை விநியோகம் செய்வதற்கான சேவைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-5)




# இலங்கை - பாக். - தென்னாபிரிக்க ஆட்டத் தொடர் இன்று ஆரம்பம்

இலங்கை, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டித்தொடர் இன்று காலி சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பமாகிறது.

இன்றைய முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியுடன் மோதும்.

இன்றும், எதிர்வரும் 9ஆம் திகதியும் பாகிஸ்தான் அணியுடன் மோதவுள்ள இலங்கை அணியின் விவரத்தை நேற்று இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வெளியிட்டுள்ளது.

அணி விவரம் வருமாறு:-

சனத் ஜெயசூரிய (அணித் தலைவர்), மாவன் அத்தப்பத்து (உதவி அணித் தலைவர்), ரொமேஷ் களுவிதாரண, ரஸல் ஆர்னல்ட், மகில ஜெயவர்த்தன, குமார் சங்கஹார, குமார் தர்மசேன, முத்தையா முரளிதரன், சமிந்த வாஸ், நுவான் சொய்ஸா, எரிக் உபசாந்த, உபுல் சந்தன, அவிஷ்க குணவர்த்தன, சஜிவ டி சில்வா.

இதேவேளை -

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இலங்கையில் நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ரெஸ்ற் தொடரை பாகிஸ்தான் அணி 2 - 0 என்ற கணக்கில் வென்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

# இளம் வீரர் ரஸாக் 'ஹட்-ரிக்' சாதனை!

கொழும்பு,ஜூலை5

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற்ற இரண்டாவது ரெஸ்ற் ஆட்டத்தில் அடுத்து அடுத்து மூன்று இலங்கை அணி வீரர்களை ஆட்டமிழக்கச் செய்து 'ஹட்-ரிக்' (HAT - TRICK) சாதனை புரிந்த பாகிஸ்தான் அணி வீரர் அப்துர் ரஸாக் உலக ரெஸ்ற் ஆட்ட வரலாற்றில் இளம் வயதில் ஹட்-ரிக் சாதனை புரிந்தவர் என்ற பெயரைப் பெற்றுள்ளார்.

இவர் ரொமேஷ் களுவிதாரண, ரங்கன ஹெரத், ரவீந்திர புஷ்பகுமார ஆகியோரை ஆட்டமிழக்கச் செய்து இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இவருக்கு வயது 21. (ஐ-8)

# தென்னாபிரிக்கா - இலங்கை அணி மூன்று ரெஸ்ற் போட்டிகளில் மோதும்

கொழும்பு,ஜூலை5

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி இன்று ஆரம்பமாகும் முத்தரப்புப் போட்டிகளில் கலந்துகொண்ட பின்னர் இலங்கை அணியுடன் மூன்று ரெஸ்ற் போட்டிகளில் விளையாடும்.

முதல் ரெஸ்ற் ஆட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை காலியிலும் -

இரண்டாவது ரெஸ்ற் ஆட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 3ஆம் திகதி வரை கண்டியிலும் -

மூன்றாவது ரெஸ்ற் போட்டி ஓகஸ்ட் 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை கொழும்பிலும் - நடைபெறும்.

பந்தயச் சூதாட்டத்தில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் தென்னாபிரிக்க வீரர்களில் ஒருவரான கேர்ஷல் கிப்ஸ் இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ளமாட்டார். இவருக்குப் பதிலாக டிபெய்னர் என்பவர் கலந்துகொள்வார். (ஐ-8)

# பிரான்ஸ் அணியிடம் இத்தாலி தோல்வி!

ரோட்டர்டாம்,ஜூலை5

ஐரோப்பிய வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிறன்று நடந்து முடிந்த இறுதிப் போட்டியில் பிரான்ஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் இத்தாலியைத் தோற்கடித்தது.

விறுவிறுப்பான இந்தப் போட்டியில் ஆட்ட இடைவேளையின் பின்னர் சொற்ப நேரத்தில் இத்தாலி அணி ஒரு கோலைப் போட்டது. சளைக்காமல் ஆடிய பிரான்ஸ் அணி ஆட்டம் முடிவடைய 19 செக்கன்கள் உள்ள நேரத்தில் ஒரு கோலை அடித்துச் சமப்படுத்தியது.

பின்னர் மேலதிகமாக ஒதுக்கப்பட்ட நேரத்தில் பிரான்ஸ் அணி ஒரு கோலை அடித்ததன் மூலம் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் பிரான்ஸ் தலைநகர் பரீஸ் மாநகர் விழாக்கோலம் பூண்டுள்ளதாகவும், மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் இதனைக் கொண்டாடுவதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது. (ஐ-8)

# பிலிப்பைன்ஸில் தீவிரவாதிகளால் 13 கிறிஸ்தவ போதகர்கள் கடத்தல்!

பிலிப்பைன்ஸில் இஸ்லாமிய தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறச் சென்ற 13 கிறிஸ்தவ மத போதகர்களை தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்ட இந்த மத போதகர்கள் தற்போது தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமம் ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர்கள் பணயக் கைதிகளின் நலனுக்காகவும் விடுதலைக்காகவும் உண்ணாவிரதம் இருந்து வருவதாகத் தீவிரவாதத் தலைவர் ஒருவர் அரசுக்குத் தகவல் அனுப்பியுள்ளார்.

இதேசமயம் —

பணயக் கைதிகளுக்கான மருத்துவ உதவிகளை தீவிரவாதிகள் நிறுத்தி வைத்துள்ளனர். அத்துடன் விடுதலை குறித்து பணயக் கைதிகளின் சொந்த நாட்டு அரசுகளுடன் பேசவும் முதன்முறையாக தீவிரவாதிகள் முன்வந்துள்ளனர்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்பாக மலேசியாவில் இருந்து வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் உட்பட 20 பேரை இஸ்லாமிய தீவிரவாதிகள் கடத்திச் சென்று பிலிப்பைன்ஸில் பணயக் கைதிகளாக வைத்திருப்பது தெரிந்ததே. (ஐ-ஓ)

# தனிநாடு பிரகடனம் குறித்து பலஸ்தீனியர் ஆலோசனை!

காஸா, ஜூலை 5

சுதந்திர பலஸ்தீன நாடு பிரகடனப்படுத்துவது குறித்து பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மத்திய குழு காஸாவில் இரண்டு நாள் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

இதில் தனிநாடு அறிவிப்பது தொடர்பாக இறுதிக் கட்ட வரைவுத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டதாக கூட்டத்தில் கலந்து கொண்ட மத்திய குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் சுதந்திர பலஸ்தீன நாட்டை அறிவிக்க யஸீர் அரபாத்துக்கு முழு ஆதரவு வழங்குவது என்றும் —

ஆனால் பிரகடனத்திகதி எதுவும் முடிவு செய்யப்படவில்லை என்றும் —

அந்த உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஆண்டு சுதந்திர பலஸ்தீன நாட்டை பிரகடனப்படுத்தப் போவதாக பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத் முன்பு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் —

ஒரு தலைப்பட்சமாக பலஸ்தீன நாட்டை அறிவிப்பது தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கும் என்று இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக் பலஸ்தீனத் தலைவர்களை எச்சரித்துள்ளார்.

இந்த எச்சரிக்கையை பலஸ்தீனத் தலைவர்கள் உதாசீனப்படுத்த முடியாது என்றே கருதப்படுகிறது.

# செச்சினியாவில் தீவிரவாதிகள் பெரும்தற்கொலைத்தாக்குதல்!

## சிவிலியன்கள் ரஷ்யப் படையினர் 60பேர் பலி!

குரோஸ்னி, ஜூலை 5

செச்சினியாவில் ரஷ்யப் படைகளின் நிலைகள் மீது தீவிரவாதிகள் முதல் முறையாக நடத்திய தற்கொலைத் தாக்குதல்களில் 60 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

குரோஸ்னி அருகே பொலிஸ் விடுதி ஒன்றின் மீது வெடிபொருள்களை ஏற்றிய டிரக்கைத் தீவிரவாதி ஒருவர் ஓட்டி வந்து மோதியதில் 8 பொதுமக்கள் உட்பட 25 பேர் இறந்தனர்.

குடாமாஸ்பகுதியில் நடந்த மற்றொரு தற்கொலைத் தாக்குதலில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவற்றைத் தவிர மேலும் மூன்று தற்கொலைத் தாக்குதல்களை ரஷ்யப் படைகள் மீது செச்சினியத் தீவிரவாதிகள் நடத்தியுள்ளனர். 24 மணி நேரத்திற்குள்

உலக அரங்கில்

தொடர்ந்து நடந்த இந்தத் தாக்குதல்களில் 60 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

செச்சினியாவை ரஷ்ய இராணுவம் கைப்பற்றிய போதும் தீவிரவாதிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அதனால் முடியவில்லை என்பதை இது எடுத்துக்காட்டுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இத்தகைய தற்கொலைத் தாக்குதல்களைத் தீவிரவாதிகள் ரஷ்யாவிலும் நடத்தக் கூடும் என்ற அச்சமும் தற்போது எழுந்துள்ளது. (ஐ-ஓ)

# ரஷ்ய அதிபர் சீனா செல்கிறார்

மொஸ்கோ, ஜூலை 5

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் எதிர்வரும் 18 ஆம் திகதி சீனாவுக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொள்வார்.

அப்போது அவர் சீன அதிபர் சியாங் செமினுடன் இருதரப்பு உறவுகள் மற்றும தேசிய ஏவுகணைத் திட்டம் ஆகியவை குறித்து ஆலோசனை நடத்துவார்.

# பிஜி அரசியலில் புதிய சிக்கல்: சிவில் அமைச்சரவைக்கு கிளர்ச்சியாளர்கள் எதிர்ப்பு

சுவா, ஜூலை 5

பிஜியில் இராணுவத் தளபதி பிராங் பைனிமாரா நியமித்த சிவில் அமைச்சரவையைக் கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ்ஸ்பைட் அங்கீகரிக்க மறுத்துவிட்டார்.

அத்துடன் புதிய அமைச்சரவையின் நியமனம் பிஜியின் அரசியல் நிலைமையை மேலும் மோசமாக்கும் என்றும் —

நாடாளுமன்றக் கட்டடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மகேந்திர சௌத்திரியின் நிலைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் —

எச்சரித்துள்ளார்.

தளபதி பைனிமாரா புதிய அமைச்சரவையை நியமித்தபோது கிளர்சியாளர்களைக் கலந்தாலோசிக்காததாலேயே ஸ்பைட் அதனை ஏற்க மறுப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் இராணுவத்துக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் உடன்பாட்டை ஏற்படுத்தி கிளர்சித் தலைவர் ஜோர்ஜ்ஸ்பைட் புதிய அமைச்சரவையை அங்கீகரிக்க வைக்க முயற்சிகள் நடைபெறுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில் —

தளபதி பைனிமாரா புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

இதன்மூலம் பிஜிபூர்வீகக் குடிகளின் ஆதிக்கத்தை ஏற்படுத்த அவர் முயல்வதாகக் கருதப்படுகிறது. அத்துடன் இது பிஜியில் வாழும் இந்திய வம்சாவளியினர் மத்தியில் ஒருவித அச்ச உணர்வைத் தோற்றுவித்துள்ளது. (ஐ-ஓ)

# மெக்ஸிக்கோவில் ஆளுங்கட்சி 71 ஆண்டுகளின் பின்தோல்வி!

மெக்ஸிக்கோசிற்றி, ஜூலை 5

மெக்ஸிக்கோவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 71 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த கட்சி படுதோல்வியைச் சந்தித்துள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான தேசிய நடவடிக்கைக் கட்சி நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் பெரும் வெற்றி பெற்றது.

1929 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவன புரட்சிக் கட்சி தொடர்ந்து தேர்தலில் வெற்றி பெற்று வந்தது. இந்தக் கட்சியே தற்போது தோல்வியைத் தழுவியுள்ளது.

வெற்றி பெற்ற எதிர்க்கட்சித் தலைவர் வின்சென்ட் பொக்ஸ், மெக்ஸிக்கோவில் ஊழல் பெருமளவில் பெருகிவிட்டதாகவும் அதனை ஒழிப்பதே தமது முதற் கடமை என்றும் கூறியுள்ளார்.

# பொலீஸார் மீது நக்சலைட்டுகள் தாக்குதல்

ஹைதராபாத், ஜூலை 5

ஆந்திர மாவட்டம் குண்டுரில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட இரு பொலிஸார் நக்சலைட்டுகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பொலிஸார் இருவரும் குற்றவாளி ஒருவரைத் தேடி மோட்டார் சைக்கிளில் சென்ற போது வழி மறித்த நக்சலைட் கும்பல் அவர்களை சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச் சென்று விட்டதாகக் கூறப்படுகிறது. (ஐ-ஓ)

# பிஜியில் நேற்று திடீரென இராணுவத்துக்குள் கிளர்ச்சி!

பிஜியில் கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ் ஸ்பைட்டுக்கு ஆதரவான இராணுவத்தினர் கிளர்ச்சியில் இறங்கியுள்ளனர்

வலுவாலெபு தீவில் இராணுவத் தளபதிக்கு விசுவாசமான படையினர் மீது கிளர்ச்சி செய்யும் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதே சமயம்

லபாக்கா தீவில் உள்ள இராணுவ முகாமை ஸ்பைட்டிற்கு ஆதரவான இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

புதிய சிவில் அமைச்சரவையின் பதவியேற்பு வைபவம் தலைநகரில் நடைபெற்றுக்கொண்டிருந்த போதே மற்றைய இடங்களில் இராணுவத்தினர் திட்டமிட்டு கிளர்ச்சியில் இறங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஐ-ஓ)

# காஷ்மீர் சுயாட்சிக் கோரிக்கை ஓய்ந்துவிடப் போவதில்லை

## பாரூக் அப்துல்லா உறுதி

பெங்களூர், ஜூலை 5

சட்டசபையில் நிறைவேற்றிய சுயாட்சித் தீர்மானத்தை நாடாளுமன்றம் நிராகரித்தாலும் கூட அந்தக் கோரிக்கை ஓய்ந்துவிடப்போவதில்லை என்று காஷ்மீர் முதல்வர் பாரூக் அப்துல்லா கூறினார்.

பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் முதல்வர் பாரூக் அப்துல்லா கூறுகையில் சுயாட்சி வழங்குவது குறித்து தேசிய விவாதம் நடத்துவதற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும்

இதற்கு அரசியல் சாசனத்துக்கு உட்பட்டு ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதே சமயம் காஷ்மீர் தீர்மானம் கோருவது போன்ற சுயாட்சியை பாரதிய ஜனதாக் கட்சி கடுமையாக எதிர்ப்பதாக கட்சியின் துணைத் தலைவர் ஜனா கிருஷ்ண மூர்த்தி கூறியுள்ளார்.

# தீவிரவாதிகளை வெளியேற்ற நடவடிக்கை

புதுடில்லி, ஜூலை 5

பூட்டான் காடுகளில் மறைந்துள்ள உல்பா தீவிரவாதிகளை வெளியேற்ற தீவிர நடவடிக்கை எடுக்கும்படி இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து உல்பா தீவிர வாதிகளை வெளியேற்ற கடும் நடவடிக்கை எடுப்பதாக பூட்டான் அரசு உறுதி அளித்துள்ளதாக உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

உல்பா தீவிரவாதிகள் வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்கள் பெறுவதற்கு பூட்டான் அதிகாரிகள் உதவி செய்வதாக ஏற்கனவே செய்திகள் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-ஓ)

# பஞ்சாப் முதல்வர் பாதலும் சுயாட்சி அதிகாரம் கோருகிறார்

காஷ்மீரை அடுத்து பஞ்சாப் மாநிலத்திலும் சுயாட்சி அதிகாரக் கோரிக்கை எழுந்துள்ளது.

பஞ்சாப் மாநில முதல்வர் பிரகாஷ்சிங்பாதல் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அதே சமயம் பஞ்சாப் மாநிலத்தின் முன்னேற்றம் கருதியே தான் இந்தக்கோரிக்கையை விடுப்பதாகவும் பாதல் கூறியுள்ளார். (ஐ-ஓ)

# மங்கோலியத் தேர்தலில் கம்யூனிஸ்ட்டுகள் வெற்றி

மங்கோலியாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் பெரும் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்தத்தேர்தலில் ஜனநாயகக் கட்சிகள் படுதோல்வி அடைந்துள்ளன.

சோவியத் யூனியன் சிதைந்தபின் மங்கோலியாவில் நடைபெறும் 4 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் இது ஆகும். ரஷ்யாவின் சிதைவை காரணம் காட்டி கம்யூனிஸம் தோற்றுவிட்டதாக ஜனநாயகக் கட்சிகள் இத்தேர்தலில் பிரசாரம் செய்து வந்தன.

இதனை மீறி நாடாளுமன்றத்தின் 76 ஆசனங்களில் 72 ஆசனங்களை கம்யூனிஸ மக்கள் புரட்சிக்கட்சி கைப்பற்றியுள்ளது. (ஐ-ஓ)

# மூன்று மாதங்களுக்கான உணவு கையிருப்பில்!

## செயலக அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ். மாவட்ட மக்களுக்கு மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கையிருப்பிலிருப்பதாக யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் செ. மகாலிங்கம் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

குருநகரிலுள்ள அரச களஞ்சியத்தில் தொடர்ந்து திருட்டுக்கள் இடம்பெற்று வந்தமையால் அந்தக் களஞ்சியத்தில் இருந்த பொருள்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

'லங்கா முடித்த' கப்பலில் 2 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப்பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. அத்துடன் 'குமண' கப்பலிலும் உணவுப் பொருள்கள் எடுத்துவரப்படவுள்ளன.

அரிசி, சீனி, பருப்பு, பால்மா உட்பட அத்தியாவசியப் பொருள்கள் யாழ். செயலக களஞ்சியங்களில் தாராளமாக இருக்கின்றன.

ஜூலை மாதத்துக்குரிய நிவாரணத்துக்குரிய பொருள்கள் சகல ப.நோ.கூ. சங்கங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்களுக்குரிய ப.நோ.கூ. சங்கங்களின் கிளைகளில் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (ஐ-5)

# மட்டுவில் மாணவருக்கு அழைப்பு

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை, ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றும் மாணவர்களை எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல் லூரிக்கும் 8 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கும் சமுகமளிக்குமாறு வித்தியாலய அதிபர் செ. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

(ஐ-117)

# வாழ்த்துகிறோம்

யா/ அல்லாரை

அரசினர் தமிழ் வித்தியாலயத்தில்

அதிபராகக் கடமையாற்றி நேற்றுடன் (04-07-2000)

இளைப்பாறிச் சென்ற

## செல்வி தி. வேலுப்பிள்ளை

அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் வித்தியாலய வளர்ச்சியில் அரும்பணியாற்றிய அதிபர் குடும்பத்தினருடன் மென்மேலும் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபை.

(சி/12149)

# மாணிக்கவாசகர் குருபூசை இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 5

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை இன்று புதன் கிழமை காலை 8-30 மணியளவில் நல்லூர் சட்டநாதர் சுவாமி ஆலயத்தில் ஆலய பூசையை அடுத்து நடைபெறும். தொடர்ந்து திருவாசகப் பாராயணம் இடம் பெறும். (க)

# தகவல் தரக் கோரிக்கை

அல்லாரை வீதி. மீசாலை கிழக்கு,

மீசாலையைச் சேர்ந்த

## ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)

என்பவரை 26 - 06 - 2000 ஆம் திகதியின் பின்பு காணவில்லை.

இவர் நரைத்த முடியுடையவர். வாட்டசாட்டமான தோற்றமுடையவர். பொது நிறமானவர். இவர் 26 - 06 - 2000 ஆம் திகதி வீட்டில் இருந்து நீளக்காற்சட்டையும் சேட்டும் அணிந்து காணப்பட்டார். அதன் பின்பு காணவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஆ. தில்லைநடேசன்,
C/o சி. பாலச்சந்திரன்,
பிரதேச செயலகம், கரவெட்டி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

(சி/12150)

# கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

திருமதி ஜெகத்ஜனனி திலகராசா

அவர்களின் தந்தையார்

## வேலுப்பிள்ளை ஆறுமுகம்

அவர்கள்

2000-06-26 ஆம் திகதி மரணமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் அன்னாருக்குஎமது அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபரும்,
சகல அலுவலர்களும்,
சகல ஊழியர்களும்.

(76197)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

## கலைப்பீடம்

கலைப்பீட மாணவர்களுக்கான வருடாந்தப் பரீட்சைகள் சம்பந்தமான 'வலம்புரி' 30—06—2000 திகதியிடப்பட்ட விளம்பரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கலைப்பீட வருடாந்தப் பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகின்றன-

1) முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை/ முதற்கலைத் தேர்வு மீள் பரீட்சைகள்
**15-08-2000**

2) பொதுக் கலை பகுதி II / சிறப்புக் கலை பகுதி III பரீட்சைகள் (94/95கல்வியாண்டு 95/96கல்வியாண்டு)
**04-09-2000**

3) ஆங்கிலம் (இரண்டாம் மொழி) மீள் பரீட்சைகள் English as a Second Language I, II and III Repeat
**17-07-2000**

4) பொதுக்கலை பகுதி I / சிறப்புக் கலை பகுதி I, பகுதி II பரீட்சைக்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
04—07—2000

(சி/12145)

# அறிவித்தல்

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கத்தின்

## விசேட பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் எல்லுப்போலை சின்னத்தம்பி தலைமை அலுவலகக் கூட்டுறவுப் பரிசோதகராகிய எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்புக் கடன் நிவிர்த்திச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்தை கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டவிதி 18 (1)ன் கீழ் எனது தலைமையில் அழைக்கின்றேன். மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளத் தகுதியுள்ள அங்கத்தவர்களைத் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

கூட்டம் நடைபெறும் இடம்:
யாழ். போதனா வைத்தியசாலை புதிய வெளி நோயாளர் பிரிவு (மேல்மாடி)
காலம்: 2000-07-08 சனிக்கிழமை
நேரம்: பி. ப. 1-30 மணி

நிகழ்ச்சி நிரல்


1. இறைவணக்கம்
2. தலைமையுரை
3. பொருளாளர் தெரிவு
4. நன்றியுரை

எ. சின்னத்தம்பி
தலைமை அலுவலகக் கூட்டுறவுப்பரிசோதகர்

கூட்டுறவு அலுவலகம்,
857, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 2000-07-04 (76201)

# விழிநீர் அஞ்சலி

## ஆண்டொன்று சென்றதையோ!



அகம் 10 — 10 — 1971

பரம் 16 — 07 — 1999

## அமரர் பி. கருணாரட்ண

( ரஞ்சன் )

அமைதியின்றி வாடுகிறோம் ஆறுதலைத் தாராயோ?
ஆண்டொன்று சென்றதையா அன்புமுகம் நாம் கண்டு
இரக்கமுள்ள உனது விம்பம் எங்கும் தெரியுதப்பா!
ஈராறு மாதங்கள் எப்படித்தான் மறைந்ததுவோ?
உய்ய வழிகாட்டி எமை வாழவைத்த தெய்வமே!
ஊக்கமுடன் சேவை செய்து உயர்வுடனே வாழ்ந்தாயே.
எவ்வமின்றி நெஞ்சமதில் நிழலதனைப் பரப்பிவிட்டு
ஏக்கத்தை விளைத்து இன்று ஏரம்பன் சென்றனையோ?
மண்ணதனை விட்டேகி வருடம் ஒன்றாகிடினும்
எண்ணமதில் உன் நினைவு என்றென்றும் நீங்காது!

உங்கள் பிரிவால் துயருறும்

அன்பு மனைவி, பாசமிகு மகன், தாயார், சகோதரர்கள், மாமா, மாமி, மைத்துனர்கள்.

தகவல்:
திருமதி வி. கருணாரட்ண .
கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறை. (78192)

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் ஆதிலட்சுமி

வி. எம். றோட் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுப்பிரமணியம் ஆதிலட்சுமி நேற்று (4 - 07 - 2000) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் இராசமணி, சிதம்பரநாதன் (சிதம்பரா வர்த்தக நிலையம், பருத்தித்துறை), புஸ்பராணி (புதுக்குடியிருப்பு), யோகராணி (ப. நோ. கூ. சங்கம் பருத்தித்துறை), ஜீவரோகினி, சண்முகநாதன், யோகநாதன் (பிரான்ஸ்), இந்திராணி, ஜெகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரோகினி, தங்கேஸ்வரன் (புதுக்குடியிருப்பு), சிவஞானம் (கப்பல், ஜெடா) தனபாலசிங்கம் (இத்தாலி), சிவாஜினி (பிரான்ஸ்), நந்தகுமார், கோமளா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (5 - 7 - 2000) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர் மடம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சு. சிதம்பரநாதன்
(மகன்)

வி. எம். றோட்,
பருத்தித்துறை.

(76199)

## உதயன்

### புதிய உத்தியா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கம் தயாரித்துவரும் திட்டத்தில் மிகவும் சர்ச்சைக்குரிய அம்சங்கள் இரண்டு. ஒற்றையாட்சி முறையை மாற்றிப் பிராந்திய ஆட்சி முறையைக் கொண்டு வருவது என்பது ஒன்று. வடக்கு - கிழக்கை நிரந்தரமாக இணைக்கும் விவகாரம் அடுத்தது.

உத்தேச தீர்வுத் திட்டம் தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு ஏதோ முயல்கிறது என்று பேச்சுக்கு எடுத்துக் கொண்டாலும், அதன் உயிர் மூச்சாக கருதக்கூடியது பிராந்திய ஆட்சி முறையே.

இது குறித்து ஆளுங்கட்சிக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் தீர்வுப்பொதி நகல் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட ஆரம்ப காலத்திலிருந்தே - கடந்த சுமார் ஐந்து வருட காலமாக - நூறு சதவீதமான முரண்பாடு நிலவி வருகிறது.

இத்தகைய பிரதான முரண்பாடுகள் நீங்கி, தீர்வுத் திட்டத்தை நடைமுறையாக்குவதற்கு எதிர்க்கட்சியின் ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று அரசுப் பிரமுகர்களும் அவர்களின் ஊடகங்களும் பெருநம்பிக்கை தெரிவித்து வந்தன.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் கைங்கரியத்துக்கு (மூன்றாம் தரப்புத்) தொடர்பாளராகப் பணியாற்றிவரும் நோர்வேயின் பிரதிநிதி எரிக் சொலைஸ் கொழும்பு வந்து அரசுத் தலைவருடனும், எதிர்க்கட்சித் தலைவருடனும் பேச்சுக்கள் நடத்திய பின்னர், இதே போன்று நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

ஆகப் பிந்திய, கடந்த மாதம் முப்பதாம் திகதி நடைபெற்ற சந்திரிகா - ரணில் பேச்சுவார்த்தையின்போது பிராந்திய ஆட்சி முறை குறித்து இணக்கம் காணப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன. இனப்பிரச்சினைத்தீர்வு முயற்சியில் இது பிரதான திருப்பம் என்றும் சிலாகித்துக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

ஆனால் பிராந்திய ஆட்சி முறை - ஒற்றையாட்சியை ஒழிப்பது - குறித்து ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் இணக்கம் தெரிவிக்கவில்லை என்று தகவல்கள் இப்போது கசிந்துள்ளன. இது குறித்து உறுதியான, உண்மையான தகவல்கள் இன்னும் உத்தியோகபூர்வமாக வெளிவரவில்லை.

எனினும் -

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் உத்தேச பிராந்திய சபை ஆட்சி முறைக்கு எதிர்க்கட்சி இணக்கம் தெரிவிக்காவிடில் - இது தொடர்பாக அதனிடம் அரசியல் மனமாற்றம் ஏற்படாவிடில் - தீர்வு முயற்சி நிச்சயம் கருகிப்போய்விடும்.

ஆகக் குறைந்தது, மாநில தன்னாட்சி அதிகாரம் கொண்ட ஆட்சிமுறையேனும் முன்வைக்கப்படாவிடில், தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை கணிசமாகவேனும் நிறைவேற்றும் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படாவிடில் - தீர்வு முயற்சி வெறும் கேலிக்கூத்தாகிவிடும்.

தென்னிலங்கையின் மக்கள் ஆதரவுடைய இரண்டு பெருங் கட்சிகளும் சேர்ந்து, காலத்தைக் கடத்தி, போரை நீடித்து, தமிழ் மக்களை அகதிகளாக்கி அல்லலுற வைத்து, "தருவதைப் பீடி" என்று நிர்ப்பந்திக்கும் ஒரு சூழ்நிலையை உருவாக்க இவ்வாறு ஒரு புதிய உத்தியைக் கையாள்கின்றனவோ என்ற சந்தேகமே ஐந்து வருட "முயற்சிகளின்" பின்னர் எஞ்சி நிற்கும்!

# பயிற்றப்படாத ஆசிரியர் போராட்டம் நிறுத்தம்

பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு முன்பாக கடந்த இரு தினங்களாக பயிற்றப்படாத ஆசிரியர்கள் மேற்கொண்ட மறியல் போராட்டம் நேற்று பிற்பகல் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

இந்த ஆசிரியர்களுக்கு ஒரு வாரகாலத்துக்குள் அனுமதி பெற்றுத் தருவதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா அளித்த உறுதிமொழியை அடுத்து போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டதாக யாழ். மாவட்ட பயிற்றப்படாத ஆசிரியர் சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே நேரம் - நேற்று பிற்பகல் ஏற்பாடாகிய கலந்துரையாடல் ஒன்றில் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ச.நா.தணிகாசலம்பிள்ளை, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் க.சதாசிவமூர்த்தி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் வ.பரஞ்சோதி, தொலைக் கல்வி நிறுவக சிரேஷ்ட போதனாசிரியர் ச.சரவணமுத்து, இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் உட்பட 50க்கு மேற்பட்ட பயிற்றப்படாத ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

இந்த கலந்துரையாடலை அடுத்துப் புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி வழங்க இரண்டு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர்களும் ஒப்புதல் அளித்தனர்.

அத்துடன் தொலைக் கல்விக்கு விண்ணப்பித்தவர்களை சேவைமூப்பின் அடிப்படையில் அனுமதிக்கக் கோருவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

(இ-3-10-73-103)

# போதுமான பவுஸர்கள் பாவனையில் எரிபொருள் விநியோகம் சீரடையும்

படையினர் வசம் இருந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நான்கு பவுஸர்களும் கூட்டுத்தாபனத்திடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டதை அடுத்து யாழ். மாவட்டத்துக்கான எரிபொருள் விநியோகம் இன்று முதல் சீரடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த பல நாள்களாக போதிய பவுஸர் வசதி இன்றி யாழ். மாவட்டத்தில் எரிபொருள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டது தெரிந்ததே.

படையினர் நான்கு பவுஸர்களை ஒப்படைத்ததை அடுத்து காங்கேசன் துறையிலிருந்து யாழ்.மாவட்டத்துக்கான எரிபொருள் விநியோகம் ஆறு பவுஸர்களில் நடைபெறவுள்ளது.

இதேவேளை நேற்று திருமலையிலிருந்து டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தக் கப்பலில் வந்த எரிபொருள்கள் இறக்கப்பட்டதும் எரிபொருள் விநியோகம் மேலும் சீரடையும் என்று யாழ். செயலக உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

(முன் வந்த செய்தி 8ஆம் பக்கத்தில்) (இ-5)

# உள்ளூராட்சி நிதியில் இருந்து இருபது லட்சம் ரூபா ஒதுக்கீடு!

யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்களுக்கென பிரமாண அடிப்படையிலான நன்கொடையாக வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி நிதியில் இருந்து 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் ஒரு பகுதியான 4 லட்சத்து 26 ஆயிரம் ரூபா கடந்த சில நாள்களுக்கு முன்பு யாழ். மாநகர சபைக்கு வழங்கப்பட்டது. இந்த நிதிக்குரிய வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. மிகுதி நிதி வந்ததும் வேலைத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படும் என்று மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்குறிப்பிடப்பட்ட நிதியில் இருந்து மாநகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகள், சிறுவர்பூங்கா, ஆயுர்வேத மருந்து உற்பத்தி நிலையம், நவீன சந்தையின் கூரைவேலை, குடி தண்ணீர் விநியோகம் ஆகியவற்றுக்கான வேலைகளே மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ-10)

### சங்கக் கிளைகள் திறப்பு

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் வலிகாமம், வடமராட்சி ஆகிய இடங்களில் கிளைக் கடைகளைத் திறந்துள்ளனர்.

வலிகாமம் பகுதியில் சித்தன்கேணி, மாகியப்பிட்டி, சுன்னாகம் ஆகிய இடங்களிலும் வடமராட்சியில் கரவெட்டி கிழக்கு, மந்திகை, நெல்லியடி ஆகிய இடங்களிலும் கிளைகள் திறக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை, உடுப்பிட்டி, உடுவில் ஆகிய இடங்களில் கிளைகள் திறக்கப்படவுள்ளதாகவும் சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

(ஐ-117)

### நமது நாட்டுக்குள்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமாக (PROJECT) எடுத்துச் செய்யலாம். பாதீனியம் காணப்படும் இடம், தொகை மதிப்பீடுகள், கட்டுப்படுத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்திட்டத்தை மேற்கொள்ளலாம். சூழல் தொடர்பாக நல்லதொரு செயற்பாட்டில் ஈடுபட்ட மனநிறைவும் கிடைக்கும்.

பாதீனியம் தொடர்பாக மேலதிக தகவல்கள் பெற விரும்பினால் எம்முடன் 'உதயன்' - 'சஞ்சீவி' மூலமாகவோ, அல்லது நேரடியாகவோ தொடர்பு கொள்ளலாம். "அங்கிகள் பலவிதம்" வாசகர் வட்டம் இதில் ஈடுபாடு கொள்ளவது நல்லது. எமக்கும் மனநிறைவைத் தரும்.

REFERENCES :-

1.JAYASURIYA,MAGDON - **NEW FAST SPREADING WEED IN SRILANKA** - PARTHENIUM HYSTEROPHORUS,

2.COBLEY, LESLIE.S. - **THE BOTANY OF TROPICAL CROPS.**

3.DRAWINGS AND DESCRIPTIONS MADE FROM OBSERVATIONS OF ACTUAL SPECIMENS.

4. PERSONAL NOTES -

5.HEYWOOD.V.H. - **FLOWERING PLANTS OF THE WORLD.**

6. MANDAL.R.C-**WEED, WEEDICIDES AND WEED CONTROL PRINCIPLE AND PRACTICE**

7.RAO.V.S - **PRINCIPLES OF WEED SCIENCE.**

### பதிவுசெய்ய கோரிக்கை

கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலைகளில் புதிய கல்வி யாண்டில் பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்ட அனைத்து ஆசிரிய மாணவர்களையும் இன்று கலாசாலைகளில் பதிவினை மேற்கொண்டு விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

### நீ வருவாய் என.......

நித்தமும் நீ வருவாய் எனும்
நிஜமான நம்பிக்கை
நிறையவே இருக்கிறது...
நீதியும் நிஜமும் உன்
நிழல் பக்கத்தால்.....
நிரப்பப்படட்டும் - என்றும்
நிம்மதியில்லாத எம் உயிர்களுக்கு
நிறைவாய் இருப்பவன் நீ மட்டுமே!
நிந்திக்கப்படும் நிஜங்கள்.....
நீயில்லாத வேளை.....
நிறையவே! - உன் வருகை
நிம்மதி தருகிறது! மூடிய இருள்
நீங்கட்டும்.........
நிலவு கைகாட்டுகிறது - எங்கள்
பகல்ச் சூரியனின் வருகை
எங்கள்
கண்களை சாந்திப்படுத்துகிறது....
'உதயனே' என்றுமே
உனக்கு மறைவும் இல்லை
மரணிப்பும் இல்லை!......

*- சி. சிவாணி -*

### நீதி நிலைத்திடும்

ஆதி அறவழி
அமைந்த உண்மையின்
நீதி உயர்வினில்
நின்று நிலைத்திடும்!
சேதி செவிகளைத்
தோட்கச் செய்துமே
ஓதி நிற்பவர்
உண்டென மானிடம்
சற்று ஆறுதல்
பெற்று நிமிர்ந்திடும்!
உற்ற நீதியை
ஒளித்து வைத்துமே
இட்ட மாக
இன்னல் செய்திடும்
சட்ட வாதம்
செய்திடும் வர்க்கமும்
மட்ட மான
வன்முறை யாளரும்
பட்டு உணர்ந்திட (ப்)
பளிச்சிட் (டு) இருளினை
வெட்டிச் சத்தியம்
வெளிச்சமாய் ஒருநாள்
எட்டி வந்துமே
இடித்திடும் நிச்சயம்!
எந்தத் தேவதை
எப்படி மயக்கினும்
முந்து நீதியின்
முதிர்ந்த தேவதை
அந்த ரங்கமாய்
தந்தி ரங்களை (ப்)
பிந்தி யாயினும்
சிந்திச் சிதைக்குமே.

*- தீவகன் -*

# ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் தேனினும் இனிய திருவாசகத்தை அருளியவர்

**சைவப்புலவர்**
**இராசையா ஸ்ரீதரன்**

இன்று தித்திக்கும் திருவாசகத்தை நமக்களித்த மாணிக்கவாசக சுவாமிகளது குரு பூஜைத் தினமாகும். தேனினும் இனிய திருவாசகத்தை ஓதி உணர்ந்து முத்திக்கு வழிதேடுவது சிறப்புடையது. வண்டானது பல்வேறு மலர்களிலிருந்து தேனை எடுப்பது போல, வேதாகம உபநிடதங்களிலிருந்து, திருவாதவூரராகிய வண்டு திருவாசகமாகிய தேனை எடுத்து, இந்த உலகம் உள்ளவரை உண்ணுவதற்காக நமக்கு வழங்கியருளினார்.

தேன் தான் கெடாததோடன்றித் தன்னில் ஊறவைத்த பேரீச்சம்பழம், திராட்சைப்பழம், இஞ்சி முதலிய பொருள்களையும் கெடவிடாது வைத்திருக்கிறது. அதேபோல திருவாசகம் தான் அழியாதது மட்டுமன்றி தன்னை ஓதுவாரையும் பாதுகாக்கும் திறனுடையது.

தேன் பித்தத்தைப் போக்கும்; நல்ல இரத்தத்தை நல்கும். ஆனால் மணிவாசகர் தந்த திருவாசகத் தேனோ பிறவிப்பிணியை மாற்றி இறைபதத்தை நல்கும்.

அறியாமையால் விளையும் அல்லல்கள் அனந்தம். இந்த அறியாமையை அகற்றி இறைவனுடைய அருளை எமக்குப் பெற்றுக் கொடுப்பது திருவாசகம்.

"சிறந்தடியார் சிந்தனையுள்
தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள்
பெருமான்"

என்ற சிவபுராணவரிகள் ஈண்டு நோக்கத்தக்கன. திருமூலர் தேனுக்குள் இன்பஞ் செறிந்தாற்போல் ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே என்றும், "உண்ட நெஞ்சறி தேனே வானோர் பெருமானே" என்று அருணகிரிநாதரும் தேனைப் பற்றிக் கூறியுள்ளனர்.

திருவாசகம் எட்டாம் திருமுறை. கல்லையுங் கரைக்கும் கனிவுடையது திருவாசகம். கல்நெஞ்சை நன்னெஞ்சாக்கும் பெருமையுடையது. பொன்னம்பலத்தாடுகின்ற தில்லைக் கூத்தனை சிவபெருமான் திருக்கரத்தினால் எழுதப்பெற்ற சிறப்பும் பெருமையுமுடையது திருவாசகம். இந்தத் திருவாசகத்தின் பெருமையை இராமலிங்க அடிகளார்,

"வான் கலந்த மாணிக்க வாசக
நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து
செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்
ஊன் கலந்து உயிர் கலந்து
உவட்டாமலினிப்பதுவே"

- என்று அழகாகக் கூறியுள்ளார்.

அறம், பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிய இந்த உடம்பு நீர்க்குமிழிக்கு நிகரானது. இந்தப் பிறவிக்கடலிலிருந்து எமக்கு மீட்சியைத் தருவது திருவாசகம். மாணிக்கவாசகப் பெருந்தகை சிந்தனையை இறைவனுக்கே ஆக்கிக் கொண்டார். அந்தக் கரணங்களையும் பொறி புலன்களையும் ஆண்டவனுக்கு அடிமையாக்கிய பின், இறைவன் வெளிப்பட்டுத் தோன்றி, அடிகளாரை ஆட்கொண்டார்.

பிட்டுக்கு மண் சுமந்த பெருமான் மாணிக்கவாசகரின் பக்தித் திறத்தைக் காட்டவே பூலோகத்தில் பரமாசார்ய வடிவங் கொண்டு குருந்தமர நிழலிலே எழுந்தருளினார். அவர் மணிவாசகரின் திருவாசகத்தை கேட்கும் அவாவினால் உந்தப்பெற்று பொன்னம்பலத்தினின்றும் வந்தார் என்று புராணம் கூறுகின்றது.

ஆகவே மாணிக்கவாசகரின் குருபூசைத் தினத்தில் அவரது திருவாசகத்தை மனம் ஒருப்பட்டு ஓதி உய்ந்து உணர்தல் பெரும் நலன் தரும்.

அறிவுக் கருவூலமாகவும் ஆனந்தத் தேன் சொரிகின்ற இனிய கற்பகமாகவும் விளங்கி எண்ணற்ற அரிய பெரிய கருத்துக்களை நமக்குத் தரும் திருவாசகம் படிக்குந் தோறும் சிந்திக்குந் தோறும் உவட்டாத உவகையைத் தருகின்ற செந்தமிழ்ப் பனுவலாகும். *

### உதயவாக்கு

**எத்தனை குழப்பம் நேர்ந்தாலும் பொய்மை மறைந்துவிடும்; மெய்மை மேலே உயர்ந்து நிற்கும்.**

*- காந்தி மகான்*

### நாளை

**ஆனி 22**
**வியாழக்கிழமை**
திதி: பஞ்சமி
முற்பகல் 2.59வரை
நட்சத்திரம்: பூரம்
பின்இரவு 1.35வரை
நடேசர் அபிஷேகம்
சுபநேரம்: 7.28-8.58
ராகுகாலம்: 1.28-2.58
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# விலை உயர்வை ஆட்சேபித்து கொழும்பில் ஐ.தே.க. பேரணி!

## 18ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடு

கொழும்பு,ஜுலை5

அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைஉயர்வு மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவற்றை கண்டித்து ஐ.தே.கட்சி எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பில் கண்டனப் பேரணி ஒன்றை நடத்த உள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஐ.தே. கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் மேற்படி போராட்டம் பற்றி தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றுவரும் யுத்த நடவடிக்கைகள் காரணமாக அரச ஊழியர்களின் இரண்டு நாள் சம்பளத்தை பெறுவது என்ற அரசாங்கத்தின் முடிவு பற்றியும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# இலங்கை அரசுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து உதவிகள் வழங்கும்

## ஜெனரல் முஷ்ராப் தெரிவிப்பு

கொழும்பு,ஜுலை5

விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போராடும் இலங்கைக்கு பாகிஸ்தான் தொடர்ந்து உதவிகளை வழங்குமென்று இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷ்ராப் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தினசரி ஒன்றுக்கு அவர் இத்தகவலைத் தெரிவித்துள்ளதாக கொழும்பில் அரச சார்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதே சமயம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்துக்கு பாகிஸ்தான் தொடர்ந்து உதவிகளை வழங்குமென்று அந்த நாட்டுத் தகவல் தொடர்பு அமைச்சர் ஜாபீர் ஜபார் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் சம்பவங்களைப் பாகிஸ்தான் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பிரெஞ்சு மருத்துவர் வருகை

நெல்லியடி,ஜுலை5

மந்திகை மருத்துவமனையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் பிரெஞ்சு மருத்துவ குழுவினருடன் சேர்ந்து பணியாற்ற தொழில்நுட்பவியலாளர் ஒருவரை அந்த நிறுவனத்தின் தலைமையகம் இங்கு அனுப்பி வைத்துள்ளது.

எல்.ஜீல்ஸ் என்பவரே கடந்த மாத நடுப்பகுதியில் இங்கு வந்து சேர்ந்துள்ளார்.

இவரது நியமனத்தின் பயனாக மந்திகை மருத்துவமனையில் சேதமடைந்திருந்த சக்கர நாற்காலிகள், தள்ளு வண்டிகள் போன்றவை திருத்தம் செய்யப்பட்டு பாவனையில் விடப்பட்டுள்ளன.

இதேவேளை -

இந்த வைத்தியசாலை வளவில் பொருத்தப்பட்டு பழுதடைந்த நிலையில் இருந்த 30 கே.வி. வலுவுடைய மின்பிறப்பாக்கியும் திருத்தப்பட்டு அதன் மூலம் இவ்வைத்தியசாலைக்கு மின்விநியோகம் சீராக்கப்பட்டுள்ளது. (இ-109)

# வவுனியாவில் தமிழ்க் கட்சிகள் காவலரண்கள் அமைக்க தடை!

வவுனியா,ஜுலை5

வவுனியா நகரத்தில் பிரதான வீதிகளில் அரசியல் கட்சிகள் தமது காவலரண்களையும் முகாம்களையும் அமைக்கக்கூடாது என்று வவுனியா படை இணைப்பு அதிகாரி பிரிகேடியர் திஸ்ஸ ஜெயவர்த்தன அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பு ஒன்றின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசியல் கட்சி ஒன்றில் இருந்து உறுப்பினர் எவராவது விலகினால் அவர் தொடர்பான விவரங்களை தமக்கு அறிவிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-164-3)

# ஐஸ் கட்டி உற்பத்தி மீண்டும் ஆரம்பமாகும்

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் நடத்தப்பட்டு வந்த ஐஸ் கட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை எதிர்வரும் 10ஆம் திகதி தொடக்கம் மீண்டும் ஐஸ்கட்டி உற்பத்தி செய்யும் வேலையை ஆரம்பிக்க உள்ளதாக அதன் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.

மின்சாரத்தடை காரணமாக இந்த உற்பத்தி வேலை தடைப்பட்டுள்ளதாகவும் ஜெனரேட்டரின் உதவியுடன் ஐஸ்கட்டி உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-51)

# புலிகள் தரப்பில் பத்துப்பேர் உயிரிழப்பு

வவுனியா,ஜுலை5

பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் தமது தரப்பில் பத்துப்பேர் உயிரிழந்துள்ளனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

* 11-12-99 அன்று நடைபெற்ற ஓயாத அலைகள்-3 தாக்குதலின் போது - கரும்புலி மேஜர் செழியன் (மகேந்திரராஜா பாலமுரளி - யாழ்ப்பாணம்)

* 18-12-99 அன்று நடைபெற்ற ஓயாத அலைகள்-3 தாக்குதலின் போது - மேஜர் கதிரொளி (தனபாலசிங்கம் சுஜீவன் - கொக்குத்தொடுவாய்)

* 25-12-99 அன்று நடைபெற்ற ஓயாத அலைகள்-3 தாக்குதலின் போது - கரும்புலி மேஜர் ஆதித்தன் (பழனியாண்டி சுதாகரன் - பதுளை)

* 30-12-99 அன்று கிளாலிக் கடற்பரப்பில் கடற்படையுடன் ஏற்பட்ட தாக்குதலின் போது - கடற்கரும்புலி கப்டன் அறிவரசன் அல்லது அறிவு (முத்துலிங்கம் ஜனகன் - யாழ்ப்பாணம்)

* 16-02-2000 அன்று நடைபெற்ற ஓயாத அலைகள்-3 தாக்குதலின் போது மிதுனன் (பரமு சதீஸ்குமார் - முத்தையன்கட்டு)

* 12-03-2000 அன்று நெடுந்தீவுக் கடற்பகுதியில் இடம்பெற்ற கடற்படையுடனான மோதலின் போது - கடற்கரும்புலி கப்டன் சுவேந்திரன் அல்லது தினேஸ் (பகீரதநாதன் கஜானன் - யாழ்ப்பாணம்)

* கடந்த 2 ஆம் திகதி, திருகோணமலை பொலீஸ், இராணுவ கூட்டுத் தளத்தின் மீதான தாக்குதலில் - கப்டன் இன்கடர் (நவரத்தினராஜா ஜெகதீஸ்வரி - திருகோணமலை), கப்டன் முகிலன் (இராமன் ரமேஸ் - கிளிநொச்சி)

* 03-07-2000 அன்று இடம்பெற்ற மோதல்களின் போது - ராதை அல்லது அருளரசி (சிறிகந்தசாமி சிறிலதா - யாழ்ப்பாணம்), எல்லைப் படை வீரர் செந்தில்நாதன் (சுப்பிரமணியன் செந்தில்நாதன் - கிளிநொச்சி) ஆகியோர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## தணிக்கையை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது. அதற்கு வேறு எத்தகைய அரசியல் காரணங்களும் இல்லை.

எனவே செய்தி ஒன்றை வெளியிட முன்பு அது தேசியப் பாதுகாப்பு மற்றும் தேசியப் பந்தோபஸ்துக்கு குந்தகம் விளைவிக்குமா என்பதைக் கருத்தில் கொள்வது செய்தி நிறுவனம் மற்றும் ஆசிரியர்களின் முக்கிய கடமையாகின்றது" - என்றும் அவர் சொன்னார். (உ-4-7)

## குடாநாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த இறங்குதுறையின் திறப்பு விழா பற்றிய படங்களையும் அது ஒளிபரப்பியது. அந்தக் காட்சிகள் காரைநகர்ப் பகுதியில் ஒளிப்பதிவு செய்யப்பட்டவை போல் தோற்றின.

இந்தப் புதிய இறங்குதுறை மூலம் இராணுவ நடவடிக்கைகளுக்குத் தேவையான யுத்த டாங்கிகள், டிரக் போன்றவை இறக்கப்பட்டு வருகின்றன என்றும் "ரூபவாஹினி" அறிவித்தது.

இதற்கிடையில் -

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிசில் திசேரா ஆகியோரும் ஏனைய இராணுவத் தளபதிகளும் வடபகுதியில் தாக்குதல்கள் நடத்தப்படும் பல பகுதிகளுக்கும் சென்று யுத்த நிலைமையை அவதானித்தனர் என்றும் -

வடபகுதியில் கடமையாற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளையும் ஏனைய துருப்பினர்களையும் சந்தித்து எதிர்கால யுத்த நிலைமை குறித்து அவர்களுடன் கலந்தாலோசித்தனர் என்றும் - இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

## ஜனாதிபதியின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டு வருவதாகவும் -

ஆயுதப் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் பல யோசனைகளை அது தயாரித்துள்ளது என்றும் - இந்தியா நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தது.

நேற்று மாலை புதுடில்லி சென்றடைந்த அமைச்சர் லக்ஷமன் ஜெயக்கொடியுடன் ஜனாதிபதியின் செயலாளர் பாலபெட்டபெண்டியும் சென்றுள்ளார்.

மூன்று நாள் டில்லியில் தங்கியிருக்கும் அமைச்சர் லக்ஷமன் ஜெயக்கொடி இந்தியப் பிரதமர் வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்துவார்.

பிரதமர் வாஜ்பாய்க்கு ஜனாதிபதி சந்திரிகா எழுதியுள்ள கடிதத்தையும் அவர் கையளிப்பார்.

இலங்கை அரசு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இந்திய அரசு இதுவரை வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்தக் கடிதம் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சு நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்திய அரசு ஆரம்பித்துள்ளது என்று இந்திய பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பாஞ்ஜா அறிவித்துள்ளார். (இ-க-3-4-7)

## மர்மப்பொருள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவரது சகோதரரும் விறகு பொறுக்குவதற்காக நேற்று மதியம் சென்ற சமயம் மர்மப்பொருள் ஒன்றைக் கண்டெடுத்தனர் என்றும் -

அந்தப் பொருளை இருவரும் சேர்ந்து கல் ஒன்றில் குத்தியபோது அது வெடித்தது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த அவரின் சகோதரன் ஜேசுராசா ஆரோக்கியராஜ் (வயது 11) யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றைய சம்பவம் பருத்தித்துறை வல்லிபுரக் கோயிலுக்குச் சமீபமாக பாளையடியல் அரசடி பெரிய தம்பிரான் ஆலயப் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

கண்டெடுத்த மர்மப்பொருள் ஒன்றைக் குத்திப் பார்த்த மாணவர் ஒருவர் அது வெடித்ததில் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

புற்றளை மகாவித்தியாலய 7ஆம் ஆண்டு மாணவரான ஸ்ரனிஸ்லாஸ் ராஜவிநோதன் (வயது 13 - சிங்கைநகர்,புலோலி)என்பவரே உயிரிழந்தவராவார். (இ-3-4-109-139)


A/L தமிழ் 2000 - ஓகஸ்ற்
மாதிரிப் பரீட்சைகள் - 02

| | | | | |
|---|---|---|---|---|
| பரீ.01 | பகுதி I | 05-07-2000 | புதன். | 9.00 a.m. |
| | பகுதி II | 07-07-2000 | வெள்ளி. | 9.00 a.m. |
| பரீ.02 | பகுதி I | 17-07-2000 | திங்கள் | 9.00 a.m. |
| | பகுதி II | 18-07-2000 | செவ். | 9.00 a.m. |

(பண்டிதர்) மாவை. V.M.லிங்கம் B.A. (Hons)

குறிப்பு:- வெளி மாணவர்களும் தோற்றலாம், ஆசிரியர் கற்பிக்கும் கல்வி நிலையங்களில்.

(இன்று தோற்ற முடியாதவர்கள் நாளையும் தோற்றலாம்)

(76174)



சங்கானையில்

நல்லூர்

சந்தியா மல்ரி கோட்யாட்

அழகுசாதன, அன்பளிப்பு, பாடசாலைப் பொருள்கள்,
எவர்சில்வர், சென்ற் வகைகள், அழகிய வர்ணப்படங்கள்,
பாதணி வகைகள், வாழ்த்து 'மடல்கள், 'பாக்' வகைகள்,
பிளாஸ்ரிக் பொருள்கள்,
கை, மேசை, சுவர் மணிக்கூடுகள்,
Fevicryl Paint, Acron Paint Items மற்றும்
பட்டின், பக்கிள் கலரிங் செய்து பெற்றிடவும்
நீங்கள் நாடவேண்டிய இடம்

சந்தியா மல்ரி கோட்யாட்

பிரதான வீதி, சங்கானை.

(76195)


## மரண அறிவித்தல்

### அப்புத்துரை குமாரசாமி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை குமாரசாமி நேற்று (04-07-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை - செல்லம் தம்பதியினரின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் தையல்நாயகி, சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்), செல்வராணி (பிரான்ஸ்), சூரியகலா (பிரான்ஸ்), தட்சணாமூர்த்தி (முத்துக்குமரன் ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்ப் பாணம்), ரூபகலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவ யோகநாதன் (ஜேர்மனி), இந்திராணி (பிரான்ஸ்), சிவகந்தகுமார் (பிரான்ஸ்), சிவசுப்பிரமணியம், புனிதவதி, இரத்தினசபாபதி - தவமணிதேவி, புஸ்பராஜா சித்திராதேவி, ஆனந்தராஜா - சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் சந்திரிகா (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி), மதுஷன் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி), சுவேதா, அக்சயன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-07-2000) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
தட்சணாமூர்த்தி
(மகன்)

(C/12151)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-07-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.